

# தேனாறு

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை

# தேனுறா

கவிஞர்

**காரை. செ. சுந்தரம்பிள்ளை**

பீ. ஏ. (இலண்டன்)

வெளியீடு :

**யாழ். இலக்கிய வட்டம்**

**யாழ்ப்பாணம்**

யாழ். இலக்கிய வட்ட வெளியீடு 9

முதற் பதிப்பு: ஏப்பிரல் 1968

உரிமை: செ. நல்லதம்பி, காரைநகர்.

விலை ரூபாய் 2-50

# THENĀRU

(A COLLECTION OF TAMIL POEMS)

*Author*:

POET
KARAI. S. SUNDARAMPILLAI, B. A. (LOND.)

*Publishers*:

YARL ILAKKIYA VADDAM
JAFFNA.

*First Edition*: April 1968

**Price Rs.** 2-50

## காணிக்கை

கண்ணுக வென்றனையிக் காசினியி லேவளர்த்து
எண்ணோ டெழுத்தீந்த எந்தைக்கு — மண்ணுலகில்
வாணி யருளாலே வாய்த்தவித் தேனூற்றைக்
காணிக்கை செய்தேன் கனிந்து.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

Publishers:

[illegible]

JAFFNA.

First Edition: April [illegible]

Price: [illegible]

# பதிப்புரை

கவிதைத்துறையிலே தரமான கவிதைகளை யாத்து ஈழத்து இலக்கிய உலகில் முன்னேறிவரும் புதிய பரம்பரையினருள் முன்னணியில் நிற்பவர் கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்களாவர்.

யாழ். இலக்கிய வட்டத்தின் செயற்குழு உறுப்பினரான இவர் தேவரையாளி இந்துக் கல்லூரியிற் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்று கின்றார். சிறந்த வரலாற்றாசிரியராகிய இவர், தமிழ்மொழியில் மட்டுமன்றி, வேறு மொழி இலக்கியங்களிலும் பாண்டித்திய முடையவர்.

பழையனபோற்றிப் புதியன புகுத்தும் பண்பு இவரிடத்தில் நன்கு அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது. இவரது கவிதைகளில் இனிமையும், எளிமையும் இணைந்து நிற்பதோடு சொற்செறி வும், பொருட்செறிவும், தமிழ்ப் பண்பாடும் ஊடுருவி நிற்கின்ற சிறப்பை நாம் காணக்கூடிய தாகவுள்ளது.

கடந்த ஈராண்டுகளில் எட்டு நூல்களை வெளி யிட்ட நாம், மூன்றாவது ஆண்டுத் துவக்கத்தில்

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் யாத்த 'தேனாறு' கவிதைத் தொகுதியை முதலாவ தாக வெளியிடுவதிற் பெருமகிழ்வு கொள்கின்றோம்.

எமது முன்னைய வெளியீடுகளை வாங்கி ஆதரித்து எம்மை ஊக்குவித்த வாசகப் பெரு மக்கள், இலக்கிய அன்பர்கள் இந்நூலுக்கும் தம் ஆதரவை நல்கி எமது நன்முயற்சிகளுக்கு உதவு வார்களென நம்புகின்றேன்.

யாழ். இலக்கிய வட்டம்,
யாழ்ப்பாணம்,
6-4-68.

**நா. சண்முகநாதன்**
இணைச் செயலாளர்

"சிவதொண்டன்" இதழாசிரியர்

பண்டித வித்துவான் க. கி. நடராசா B. O. L Dip-in-Ed.

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளையவர்கள் யாத்த "தேனாறு" என்னும் பாடற்றொகுதியுடைய நூலை யான் பார்வையிட்டேன். செந்தமிழ்த் தேனாகிய செவ்விய ஆறு பாய்வதுபோலப் பாக்கள் ஓடும் சுவை பொருந்திய இந் நூலுக்குத் "தேனாறு" என்னும் பெயர் பொருத்த முடையதேயாம். முதற் பக்கத்திலேயே கண்ணையுங் கருத்தை யுங் கவரும் ஒரு சித்திரப்படம் அழகாக மிளிர்கின்றது. இந்நூல் (1) இயற்கை (2) தமிழ் (3) சமூகம் (4) காதல் (5) பல்சுவை (6) காவியம் என்ற ஆறு தலைப்புகளைக் கொண்டு ஒவ்வொரு தலைப்பிலும் பல்வேறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக இயற்கை யென்னும் பகுதி ஞாயிறு, திங்கள், மழை, மலையருவி, ஆறு, விண்மீன் என்ற உட்பிரிவுகளையுடையது. இவ்வாறே (காவியம் தவிர) பிறவும் பல பிரிவுகளுடையவையாம். இப் பாடல்கள் யாவும் இனிய எளிய நடையில் அமைந்துள்ளவை. சமூகம் என்னும் பகுதியில் இதன் ஆசிரியர் தமது உணர்ச்சிகளைப் படிப்போருள்ளத்தில் நன்கு பதியச்செய்யக்கூடிய வகையில் எடுத்துச் சொல்வதை யாம் காணலாம். பாட்டின் ஒழுக்குக் கும் இனிமை சான்ற எளிமைக்கும் ஓர் எடுத்துக் காட்டாக இந்நூலின் 90ஆம் பக்கத்திலுள்ள மழலைச்செல்வம் என்னும் பாடலின் ஒரு பகுதியைப் பாருங்கள்.

பண்ணோடு கீதம் பாகோடு தேனும்
பாலோடு நல்ல பழமும்
உண்போர்க்கு மில்லா உயர்வான இன்பம்
ஒருசின்ன மழலை தருமே.

என்னும் பாடற் பகுதியும் 100ஆம் பக்கத்திலுள்ள ‘ஈழ மிதுவே’ என்னும் பாடலில்வரும்

வெந்நீரு மூறும் தண்ணீரும் ஊறும்
விலையில்லா முத்து விளையும்
பன்னீரில் தோயும் பனிதங்கு மலைகள்
பணத்தோட்ட மாக மிளிரும்.

மதபேத மில்லை மதுபான மில்லை
மலைபோன்ற சிக்கல் இலையே
புதிதான ஈழ மிதுவேயென் றோதும்
பொன்னான நாளும் வருமே.

என்னும் பகுதிகளும் இதற்குச் சான்று பகரும். பல உருக்க மான கருத்துக்களையும் ஆங்காங்குக் காணலாம்.

இந்நூலில் உள்ள பாடல்களைப் பாடிய திரு. செ. சுந்தரம்பிள்ளை B. A., அவர்கள் என்னிடம் கல்விகற்ற மாணவர் ஆவர். இவர் இக்காலத்துக்கமைந்த முறையிற் பாக்களை இயற்றினும் பழைய தமிழ் இலக்கிய இலக்கணங் களையும் கற்றவராதலால், இவர்தம் பாடல்களிற் பழமையும் புதுமையும் கலந்து புதுமணங் கமழ்கின்றது. இத்தகைய பல பாக்களை இயற்றி இவர் மேன்மேலும் உயர்ச்சியடைந்து தமிழ்ப்பணி யாற்ற எல்லாம்வல்ல இறைவன் இவருக்கு அருள்பாலிப்பானாக என்று வேண்டியமைகின்றேன்.

இரசிகமணி கனக. செந்திநாதன்

அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

ஈழநாட்டிலே இப்போது வருடத்துக்கு நாற்பது ஐம்பது புத்தகங்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், கட்டுரை என்னும் ஆக்க இலக்கியத் துறையில் பரவலாக எல்லாத் துறைகளிலும் எழுத்தாளர்கள் தங்கள் கைவண்ணத்தைக் காட்டிவருகின்றனர். சமீபகாலத்தில் (10 வருடத்துள்) எழுத்தாளர் ஒவ்வொருவரும் தமது படைப்பாக ஒரு நூலையேனும் வெளிக்கொணரத் துடிக்கின்றனர். எவ்வளவு கஷ்டமிருந்த போதிலும் தமது எழுத்தை நூலாக்கி மக்கள் முன் வைக்க ஆவலுறுகின்றனர். இந்த அவா—இந்த நோக்கம்—இந்தத் துடிப்பு—வரவேற்கவேண்டியதொன்று.

ஆக்க இலக்கியத்துறையில் மற்றையோரிலும் பார்க்கக் கவிஞர்கள் தம் கவிதைகளை நூலாக்கிச் சுறுசுறுப்பாக வெளியிடுங் காட்சி மனமகிழ்வைத் தருகின்றது. அந்தப் பின்னணியில் கவிஞர் செ. சுந்தரம்பிள்ளையின் தேனூறு வெளிவருவதில் புதுமை ஒன்றுமில்லை. கவிஞர் செ. சுந்தரம் பிள்ளையவர்கள் இரண்டு மூன்று வருடங்களாக, மிகச் சுறு சுறுப்புடன் வாராவாரம் எழுதிக் குவித்துக்கொண்டே இருந்தார். ஈழத்து வாரமலர்கள், மாதப் பத்திரிகைகள் ஏதேனும் ஒன்றில் அவரது கவிதைகள் வாராவாரம் வெளி வந்துகொண்டிருந்த காட்சியைக் கண்டு நான் பிரமித்த துண்டு. அவர் 1967இல் வதுளைப் பாரதி கல்லூரி அகில

இலங்கை ரீதியில் நடாத்திய கவிதைப்போட்டியில் முதற் பரிசாகிய தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டபோதும், பிற சங்கங்கள் நடாத்திய போட்டிகளிற் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டபோதும் என்மனம் குதூகலித்தது. பல பழைய கவிஞர்களும் அவரது பாடல்களை உன்னிப்பாய்க் கவனிக்கத் தொடங்கினர்.

பிரபல கவிஞராகிய அல்வாயூர் மு. செல்லையா அவர்கள் அமரரானபின் அவருக்காக நடாத்தப்படவிருந்த ஒரு விழாவில் என்னைப் பேசும்படி அழைக்க இக்கவிஞர் வந்தார். அன்றுகூட இவர் தம்மை ஒரு கவிஞர் என்று சொல்லவில்லை. அடக்கமே உருவாக என்னுடன் உரையாடிவிட்டுச் சென்று விட்டார். யாழ்—இலக்கியவட்டத் தொடர்பால் இக் கவிஞருடன் நான் பழகநேர்ந்தது. கவிஞர் சாதாரணமானவர் அல்லர் எனப் பழகப் பழக என்னால் உணரமுடிந்தது. இக் கவிஞர் இலண்டன் பல்கலைக்கழக பீ. ஏ. பட்டதாரி. தமிழ் வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை உடையவர். தமிழை மரபுவழி நின்று படித்துச் சுவைத்தவர். பெரும் பகுத்தறிவு வாதியாகவும் பேரறிஞராகவும் விளங்கிய கந்த - முருகேசனாரிடம் பல வருடங்களாகப் பேரிலக்கியங்களையும் இலக்கணங்களையும் யாப்புமுறைகளையும் நன்கு கற்றவர். எனவே இவரது கவிதைகளில் பழைமையில் ஊறிய ஒரு புதுமை, போலிகளைக் கண்டு ஆவேசப்படுந் தன்மை, அமைதி, ஓசைநயம், பலவகையான கவிதை அமைப்பு, மெல்லிய அங்கதச்சுவை என்பவை மிளிர்வதைக் காணலாம். ஆங்கிலப் பாடல்கள்கூட மொழி பெயர்ப்பு என்ற வகையில் இராமல் தமிழ்ச் சாயல் கொண்டு அமைந்திருப்பதைப் பார்க்கலாம். மொத்தமாக தேனூறு இப்படித்தான் இருக்கிறது. இவற்றை ஆசிரியர் இயற்கை, தமிழ், சமூகம், காதல், பல்சுவை, காவியம் எனப் பாகுபடுத்திப் பாடியுள்ளார். ஒவ்வொரு பகுதியிலும் உள்ள ஓரிரு பாடல்களால் ஆசிரியரது கவிதைச் சால்பை இனி நோக்குவோம்.

தேனாறு என்ற இந்நூலைப் பார்க்கத் தொடங்குகையில் கடவுள் வணக்கப் பாடலைக் காணாது சிறிது துணுக்குற்றேன். ஆசிரியர் மரபுவழிவந்த கவிஞராயிற்றே; ஏன் பாடவில்லை? என்று ஒருகணம் யோசிக்கையில் ஞாயிறு, திங்கள், மழை என்ற மூன்றையும் முதலில் பாடியுள்ளமை புலனாயிற்று. ஆசிரியர் சிலப்பதிகார வாழ்த்தாகிய 'ஞாயிறு போற்றுதும்', 'திங்களைப் போற்றுதும்', 'மாமழை போற்றுதும்' என்ற மரபைப் பின்பற்றிப் பாடியிருப்பது மனதைச் சாந்தி செய்தது.

''நிலமகள் மானங் காக்கும் நீலப்பேராடையான அலைகடல் நின்று நீரை அள்ளியே மேகமாக்கி'' என்றும், 'இருசுடர்தனிலே யொன்றாய் இவ்வுல காளுகின்ற பெருநிலவரசே! எங்கும் பெறலருந்திருவே'' என்றும் ''அன்னைபோல் உலகைக் காக்கும் அமுதமே'' என்றும் ஞாயிறு, திங்கள், மழை இவற்றைக் கவிஞர் பாடும்போது கவிதைத் தொகுதி களைகட்டத் தொடங்கிவிடுகிறது. 'போற்றிடும் தொழில்கள் இல்லை புண்ணியந் தருமமில்லை' என ஆசிரியர் பாடுவது திருக்குறளின் வான்சிறப்பை ஞாபகப்படுத்துகிறது. ''தம்மிடம் பொருளில் லாத தரித்திரஞ் சூழ்ந்த போதும்'' என்ற பாடல் 'ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும்' என்பதனை நினைவூட்டு கிறது. ''சாதியுஞ் சமயம் நோக்காய்'' என்ற பாடல் அல்வா யூர்ப் பெருங்கவிஞர் மு. செல்லையா அவர்களது 'தெள்ளிய நிலவு தீயோர் சிறுமனைக் கண்ணுஞ் சேரும்' என்ற வரியின் விரிவான அர்த்தத்தைப் புலப்படுத்துகிறது. 'ஆறு' என்ற பாடலில் ஆசிரியர் சிறு சொல்லாராய்ச்சியே நடாத்திவிடு கிறார். குறிஞ்சி, முல்லை, மருதம் இவற்றைக் கடந்துவரும் ஆற்றைப் பார்த்து, ''ஆறென்ற பெயர்கொண்ட அமுதான அன்னாய்! யாரிந்தப் பெயர்தந்தார்''? என அவர் கேட்டு விடையும் சொல்கிறார். ''மெதுவாகச் சூல்கொண்ட ஒரு பாம்பு போல மிகஆறி நெய்தற் பரப்பிற் செல்கின்றாய்'' அதனாலே பெரியோர்கள் உன்தன்மை காட்டி ஆறுங்கள் நதிபோலே என்றே சொல்வார்கள்; இதனாலே 'ஆறென்ற

பெயர் நீ பெற்றுயோ?' என்று முடிக்கிருர். இந்த ஆராய்ச்சி யைத் தொடர்ந்து நீங்களும் நடாத்தலாம் எனக் கவிஞர் 'கோடி' காட்டுகிருர். இக்கவிதைத் தொகுதியில் உள்ள நல்ல பாடல்களில் 'ஆறு'ம் ஒன்று எனத் துணிந்து கூற லாம்.

இனி, தமிழ் என்ற பகுதியிற் பார்த்தால் 'தமிழ்க் காதல்' என்ற பாடலைச் சந்த நடையில் எடுப்பாகத் தொடங்குகிருர்.

சங்கமணம் வீசுதமிழ் மாது — புவி
எங்குமெழி லோடிலங்கும் போது — தமிழ்ச்
சிங்கம் நிகர் காளை யர்கள்
தங்கள் மொழியை மறத்தல் தீது — இதை
ஓது.

தமிழ்க் காதலையும், ''தாய்மொழிப் பற்றும் தன்னினப் பற்றும் தன்னுயிர் நாட்டினைப் பேணும் மாய்விலாக் காதல்'' உள்ள மனிதமாமணிகளையும் காட்டிவிட்டு, பழம்பெருமை பேசும் 'பத்தாம் பசலி'களையும் மேடையிலே முழங்கும் வாய்ச்சொல் வீரர்களையும் பார்த்துக் கவிஞர்கேட்கிருர், கேட்கிருரா? ஆவேசமாய்த் தாக்குகிருர்:

''மூவேந்தர் பரம்பரையா? முச்சங் கத்தில்
முழங்கியதும் உன்தமிழா? முற்றுங்கற்ற
பாவேந்தர் போற்றியபண் புனக்கு முண்டா?
பழந்தமிழர் வழியாநீ? பலநா ளாக
நாவேந்தர் நாவினிலே நடன மிட்ட
நற்றமிழன் புகழ்நாக ரீக மெங்கே?
பூவேந்த ரோடுபல புலவர் நித்தம்
போற்றிவழிப் பட்டதமிழ்ச் சாதி யெங்கே?''

மனதில் நின்று நிலைக்கக்கூடிய அருமையான கவிதை இது.

"தந்தியினுல் வானெலியாற் செய்தித்தாளாற் சணப் பொழுதிற் செல்கின்ற விமானந் தன்னுல் இந்த உலகஞ் சுருங்கிவிட்டது" என்று பாடும் கவிஞர் இவற்றினுல் இங் குள்ளோருளங்கூடச் சுருங்கிவிட்டது என்று குத்திக் காட்டு கிருர். "ஆழமான கடலே யளந்ததும் ஆற்று நீரை மறித் தணைபோட்டதும்.. ...கோளுலாவிடு வானமதிற்பல குட்டிச் செய்மதி செய்துவிடுத்ததும்" என்ற கவிதையும் அதன் பொருளும் சிலாகிக்கத்தக்கவை. குட்டிச் செய்மதி என்ற சொல் அருமையாக விழுந்திருக்கிறது. இப்பாடல் பிரபல கவிஞராகிய முருகையனின் நன்மை கண்டோமா? என்ற தலைப்பில் வரும் "வீதி கிழித்து விரைந்தன வண்டி விண்ணை இடித்து நிமிர்ந்தன மாடம்" என்ற கவிதையின் பொருளைச் சார்ந்து நடக்கிறது.

காதல் என்ற பகுதியில் கவிஞரின் மொழி பெயர்ப்புத் திறமையைக் காண முடிகிறது. ஷெல்லியின் Love's Philosophy என்ற கவிதையைப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் தொடக்கம் பலர் மொழிபெயர்த்திருக் கிருர்கள். கவிஞர் அக் கவிதையைத் தழுவி எழுதியிருக்கி ருர். தழுவல் என்று அடியிலே போடாவிட்டால் நல்ல தமிழ்க் கவிதை என்றே பலர் நினைப்பார்கள். பாடல் தமிழ்ச் சாயலோடு நன்ருக அமைந்திருக்கிறது.

"ஆற்ருேடு சுனைசேரும்; ஆருே ஓடி
ஆழ்கடலை முத்தமிடும்; அவனி தோறும்
காற்ருேடி மெய்தழுவிக் கருத்தை யீர்த்துக்
காதலிசை பாடியுள முருக வைக்கும்."

என்று தொடங்கும் ஆசிரியர் "வானத்தை முத்தமிடும் வரைகள் வந்து" என்றெல்லாம் இயற்கையே ஒவ் வொன்றும் காதல்கொள்ளும்போது நாம் காதல்கொள்ள முடியாதா? என்று கேட்கிருர்.

"இயற்கை யெனுந் தாய்மடியில் தவழு கின்ற
எப்பொருளுந் தனியாக வாழ்வ தில்லை"

என்று பாடிவிட்டு,

"செய்யமலர்ப் பாவாய்நீ சேர்ந்து முத்தம்
தித்திக்க வேஅளிக்கத் தவறி விட்டால்
வையமிசை யுள்ளபொரு ளனைத்தும் முத்த
மாரிபொழி கின்றதனல் இலாப முண்டோ?"

என்று முடிக்கும்போது நல்ல தமிழ்க் கவிதையொன்றை நயந்து வாசித்த நிலை நமக்கு ஏற்படுகிறது. திரும்பத் திரும்ப வாசிக்கும் மனோநிலை ஏற்படுகின்றது. ஆசிரியருக்கு இது ஒரு வெற்றி என்றே கூறலாம்.

அடுத்துவரும் பல்சுவைப் பகுதியில் கவிஞரின் நகைச் சுவையை நாம் அனுபவிக்கிறோம். தமக்குத் தெரியாத ஒரு வேலைக்குக் கவிஞர் பலபேரின் நெருக்குதலால் ஒப்புதல் கொடுத்துவிடுகிறார். வேலை பெரிய வேலையன்று. மாணவர் களுக்கும் ஆசிரியர்களுக்கும் உதைபந்தாட்டம். அவ்வளவு தான். "கண்ணாலே பந்தினையான் கண்டதன்றிக் காலாலே தொட்டறியேன்" என்ற தன் அனுபவத்தை, முன்னமே கூறிவிடுகிறார். அவர் ஆடிய உதைபந்தாட்டத்தைப் பாருங்கள்:

"ஓடிவந்த பந்தினையான் உதைக்க வென்றே
ஒருகாலைத் தூக்க,அது மறுகால் மோதிக்
கூடியுள்ளோர் கைகொட்டிச் சிரிக்க என்னைக்
குப்புறவே வீழ்த்தியது..... ..."

என்றும், "நாடியிலும் நெஞ்சினிலும் முகத்திலெல்லாம் நன்றாக மோதி நகைக்காளாக்கிற்று" என்றும் நமக்குக் காட்டுகிறார். உதைபந்தாட்டத்தின் இன்னொரு கட்டத்தை வர்ணிக்கிறார்:

" அப்பாடா வென்றுமே சுற்றிப் பார்த்து
அவமானந் தாங்காமல் நிற்கும் போது
தப்பாமல் என்றனது தலையை நோக்கிச்
சரியாக வந்திட்ட பந்தை இந்தா
இப்போதே யடிக்கின்றேன் தலையா லென்றே
எதிராக ஓடினேன் ஏனோ பந்து
தப்பியது என்முன்னே நின்றோ னுலே
சாய்ந்திட்டேன் மூக்கிலடி பட்ட தாலே"

வெறும் உதைபந்தாட்டத்தை நகைச்சுவை எழப் பாடிவிட்டாற் போதாது. உயர்ந்த குறிக்கோளோடு இதை முடிக்கவேண்டும். அதுவே நல்ல கவிதைக்கு அழகு என்று எண்ணியவர் போலக் கவிஞர் உதைபந்தாட்டம் பற்றிய உண்மையையும் பாடியுள்ளார். "ஒன்றைச் செய்ய வலி யற்றோருஞ் செய்கின்றோர்மேல் தப்பு ஆயிரங் காணத் தயங்கமாட்டார். தாம்கூடத் தவறலாம் என்ற எண்ணம் எப்போதும் மானிடனுக்கில்லை" என்பதுதான் அது. இந்தப் பகுதியிலுள்ள 'தரகர்', 'சம்பளவாழ்வு' என்பனவும் வாசித்து இரசிக்கக்கூடியன.

கடைசியாக இந்நூலின் தலைப்பாயுள்ள தேனுறுபற்றி இரண்டொரு வார்த்தைகள். குழந்தையின் குறும்புகளை அப்படியே ஆசிரியர் நம்கண்முன் நிறுத்துகிறார். "உண்ணும் உணவினை அள்ளுவதும்—அதை, ஒவ்வோரிடத்திலே சிந்து வதும், தண்ணீரை ஊற்றி மகிழ்ந்திடலும்—அதிற், தானே விழுந்தெழுந் தோடுவதும்" பச்சைப்படியாக நம்வீட்டில் நிகழுங் காட்சிகள்தாம்.

"பானையைத் தூக்கி உடைப்பதுவும் — அதன்
பக்கத்தில் நின்று சிரிப்பதுவும்
பூனையின் வாலை இழுப்பதுவும் — ஒரு
புத்தகந் தன்னைக் கிழிப்பதுவும்"

நாள்தோறும் நடக்கும் சங்கதிகள்தாம். இந்தக் குறும்புகள் தெள்ளுதமிழ்ச் சுவைப்பாக்களிலும் மேலாய் தேனுறு மேனி யிற் பாய்வதுபோல இனிக்கிறது என்கிறார் கவிஞர்.

குழந்தைகளைப்பற்றி வள்ளுவர், புகழேந்தி, பாரதி, கவிமணி முதல் நம்நாட்டு வேந்தனார், யாழ்ப்பாணன் அறுதியாகப் பலர் பாடியுள்ளனர். ஆசிரியரது பாடலும் சுவைமிகுந்த பாடல் என்பது என் எண்ணம்.

கவிஞனுக்கும் இரசிகனுக்குமிடையே விமர்சகன் நெடு நேரம் நின்று நந்தியைப்போல மறைத்தால் இரசிகன் 'சற்றே விலகியிரும் பிள்ளாய்' என்று சொல்லத்தொடங்கி விடுவான். எனவே இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

இந்தக் கவிதை நூலில் நான்கண்ட சிறு குறைகளை யும் சொல்லவேண்டியது என் கடன்மை. வளரும் இக் கவிஞ ருக்கு இது உதவும் என்றே நினைக்கிறேன். சில பாடல் களின் தலைப்புகள் மயக்கத்தைக் கொடுக்கின்றன. சில பாடல்கள் குழந்தைப் பாடல்களை ஒத்திருக்கின்றன.

ஆசிரியர் சொல்வளம் ஓசைநயம் பலவகைச் சந்தங்க ளோடு எழுதுகிறார். தனித்தன்மை, கற்பனைவளம் இன்னும் சிறக்கவேண்டும்.

கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளைக்கு ஈழத்துக் கவிதை வானில் நிச்சயம் இடம் உண்டு. வருங்காலத்தில் இன்னும் சிறந்த இடத்தைப் பிடிப்பார் என்றே எண்ணுகிறேன்.

குரும்பசிட்டி
10-4-68.

**கனக. செந்திநாதன்**

## என்னுரை...

அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்த எனது கவிதைகளில் ஒரு சிலவற்றையேனும் தொகுத்து ஒரு நூலாக வெளியிடும்படி இரசிகமணி கனக. செந்திநாதன், திரு. ஏ. ரி. பொன்னுத்துரை, திரு. யாழ்வாணன் போன்ற அன்பர்கள் என்னைக் கேட்டுக்கொண்டனர். அதனுல் உருவாகியதே இத் தேனுருகும்.

நூற்றுக்கு மேற்பட்ட எனது கவிதைகளைப் பார்வையிட்டுத் தொகுத்து வகுத்து அச்சுப் பிழைகளையும் நீக்கி நூலுருவில் தந்திருப்பவர் எனது இனிய நண்பரும், சிறந்த கவிஞருமாகிய திரு. வி. கந்தவனம் பீ. ஏ. அவர்களாவர்.

பயிலுங் காலத்திலிருந்தே இலக்கியத்துறையில் என்னை ஊக்கியும் எனது கவிதைகளைப்பாராட்டியும் வருபவர் எனது ஆசிரியர் பண்டித வித்துவான் க. கி. நடராசா பீ. ஓ. எல். அவர்கள். அவர்களது வாழ்த்துரை இந்நூலுக்குக் கிடைத்தமையைப் பெரும்பேருகக் கருதுகிறேன்.

தற்காலக் கவிதை இலக்கியத்திற் சிறந்த புலமையும் ஈடுபாடுமுள்ளவர்களுள் தலைசிறந்தவர் இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள்.

அன்னரது முன்னுரை தேனுற்றை அணிசெய் கிறது. அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றி.

ஈழத்திற் சிறந்த படைப்புக்களை வெளியிடுவதில் வெற்றிகண்டவர்கள் யாழ்-இலக்கிய வட்டத்தினர். அவர்களது வெளியீடாக இந்நூல் வெளிவருவதை யிட்டு நான் பெருமைப்படுகிறேன்.

எனது கவிதைகளை ஏற்றுப் பிரசுரித்துவரும் பத்திரிகைகளுக்கும், இந்நூலை மிகவும் அழகாக அச்சிட்டு உதவிய சுன்னுகம் திருமகள் அழுத்தகத் தினருக்கும் — குறிப்பாக அதன் அதிபர் திரு. மு. சபாரத்தினம் அவர்களுக்கும், அழகுற அட்டைப் படம் வரைந்து உதவிய பிரபல ஓவியர் மாருதி அவர்களுக்கும், இந்நூல் வெளிவரக் காரணமாய் இருந்த அன்பர்கள் அனைவருக்கும் எனது நன்றி யறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செ. சுந்தரம்பிள்ளை**

'தமிழகம்'
பிட்டியொல்லை,
காரைநகர்.

# அருவிகள்


| | | | | |
|---|---|---|---|---|
| **இயற்கை** | | | | பக்கம் |
| 1. | ஞாயிறு | ... | ... | 1 |
| 2. | திங்கள் | ... | ... | 3 |
| 3. | மழை | ... | ... | 5 |
| 4. | மலையருவி | ... | ... | 7 |
| 5. | ஆறு | ... | ... | 10 |
| 6. | விண்மீன்கள் | ... | ... | 12 |
| **தமிழ்** | | | | |
| 7. | தமிழ்க்காதல் | ... | ... | 15 |
| 8. | ஒருமணி | ... | ... | 17 |
| 9. | தமிழருக்கு | ... | ... | 19 |
| 10. | பூம்புகார் | ... | ... | 23 |
| 11. | முப்பால் | ... | ... | 28 |
| **சமூகம்** | | | | |
| 12. | எண்ணியெண்ணிப் பார்த்தேன் | | | 31 |
| 13. | எங்கள் ஞானம் | ... | ... | 36 |
| 14. | ஏன் பிறந்தாரோ | ... | ... | 38 |
| 15. | நடிப்பு | ... | ... | 40 |
| 16. | யார் ஏழை ? | ... | ... | 42 |
| 17. | தேயிலைத் தோட்டத்திலே | | ... | 44 |
| 18. | முயற்சி | ... | ... | 46 |
| 19. | திருநாள் | ... | ... | 48 |
| 20. | தேசமே வீடு | ... | ... | 50 |
| 21. | நீதி | ... | ... | 52 |
| 22. | மனிதனும் பறவையும் | | ... | 54 |

**காதல்** பக்கம்

23. காதல் இசை ... ... 56
24. நியாயமா ... ... 58
25. இன்லேத்தராதே ... ... 60
26. ஊனக் காதல் ... ... 63
27. பிஞ்சுவயது ... ... 65
28. துறையா சேரும் ... ... 67
29. இன்னல் களைந்துவிடு ... 69
30. காவல் ... ... 71

**பல்சுவை**

31. பக்தி ... ... 73
32. நிலேயாமை ... ... 75
33. கவிதைப் பெண் ... ... 77
34. பெருமரமாக்கி வைப்பாய் ... 79
35. பழையன கழிதல் ... ... 81
36. காலம் என்னுங் காட்டாறு ... 83
37. பேராசைக் கனல் ... ... 85
38. அன்னே ... ... 87
39. மழலேச் செல்வம் ... ... 89
40. சம்பள வாழ்வு ... ... 91
41. தரகர் ... ... 93
42. உதைபந்தாட்டம் ... ... 96
43. ஈழமிதுவே ... ... 99
44. தேனுறு ... ... 101

**காவியம்**

45. சிற்பியின் காதல் ... ... 103

# ஞாயிறு

கங்குலை யோட்ட வானக்
 கடலிடை யெழும்பிச் செங்கை
எங்குமே நீட்டு மீடில்
 எரிதழற் பிழம்பே சோதி
திங்களுக் கூட்டு கின்ற
 சுடரொளி விளக்கே தூய
தங்கத்தை உருக்கி வார்த்த
 தட்டென எழுகின் றுயே !

பொன்னெளி வீசு கின்ருய்
 புத்துணர் வூட்டு கின்ருய்
மின்னெளி மாதர் சூடும்
 மென்மலர் வாவி தோறும்
உன்னெளி பாய்ச்சு கின்ருய்
 ஒளிமலர்ச் சிரிப்புக் கண்டே
இன்னிசை வண்டு பாட
 எழுகின்ற சுடரே வாழ்க !

சேற்றினில் உழவர் உன்றன்
திருவரு ளாலே நட்ட
நாற்றினைப் பேணிக் காத்து
நற்பய னடைகின் ருர்கள்
சோற்றினை யளித்து வையத்
துயரினைப் போக்கு கின்ற
பேற்றினைப் பெற்ற தாலே
பேசரும் உயிரு மாஞய்.

நிலமகள் மானங் காக்கும்
நீலப்பே ராடை யான
அலைகடல் நின்று நீரை
அள்ளியே மேக மாக்கி
மழையெனப் பொழிந்தே இந்த
மண்மகட் கின்ப மீவாய்
இலைஉன்றன் சேவை என்ருல்
இப்புவி யில்லை யன்ருே !

காற்றில்லை மழையு மில்லைக்
கழனியிற் பயிரு மில்லை
ஆற்றினில் நீரு மில்லை
அவனியில் உயிரு மில்லை
போற்றிடுந் தொழில்க ளில்லை
புண்ணியந் தரும மில்லை
ஈற்றினில் ஒன்று மில்லை
இரவிநீ இல்லை யென்ருல் !

# திங்கள்

---

இருசுடர் தனிலே யொன்ருய்
இவ்வுல காளு கின்ற
பெருநில வரசே! எங்கும்
பெறலருந் திருவே! இந்தத்
தரணியில் இருளை யோட்டத்
தண்ணொளி வீசு முன்றன்
அருமையை அறியா மக்கள்
அறிவிலர்; அறியா தாரே.

தம்மிடம் பொருளில் லாத
தரித்திரஞ் சூழ்ந்த போதும்
செம்பொருள் கேட்ட பேர்க்குத்
தேடியே கொடுக்கும் நல்லோர்
இம்மியும் உனக்கீ டாகார்
ஏனெனில் இரக்கா தோர்க்கும்
அம்புவி தனிலே யென்றும்
அமுதைநீ பொழிகின் ருயே.

சாதியுஞ் சமயம் நோக்காய்
தாழ்வுய ரணுவு மெண்ணுய்
வேதியர் வீடா ஞலும்
வேறெவ ரிடமா ஞலும்
ஓதிடு தீமை செய்வோர்
உறைவிட மான போதும்
ஆதியி லிருந்து நீயோ
அருளொளி பொழிகின் ருயே.

இனியநற் பண்பி ஞலே
எவரையு மடக்கி யாளும்
தனிச்சிறப் பெய்த லாகுந்
தன்மையுன் னிடத்திற் கண்டேன்
கனேகடல் பரிதி மீதோ
காதலே கொள்வ தில்லே
உனேக்கணங் கண்டாற் போதும்
உவகையாற் பொங்கு மன்ருே.

வற்றிய குளங்க ளூறி
வரம்பினே மீற லுண்டு
முற்றிய செல்வ மோர்நாள்
முடிந்தழி வெய்தல் கூடும்
இற்றைநாள் வரையு மிந்த
இயற்கையை உணர்த்தல் போலச்
சொற்பநாள் தேய்ந்து பின்னர்
சுடரொளி வளர்க்கின் ருயோ?

# மழை

இளைக்கின்ற தேகத் தோடும்
　　எரிகின்ற நெஞ்சத் தோடும்
பிழைக்கின்ற மக்கள் வாழப்
　　பெய்கின்ற மழையே! உன்னால்
தழைக்கின்ற துலகம் சில்லோர்
　　சாகின்றார்; தடுக்க வேண்டில்
அழைக்கின்ற போது வாநீ
　　யாருக்குந் துன்ப மில்லை.

வாவென்ற போது நீயும்
　　வந்திடில் வருத்தம் போக்கிப்
போவென்ற போது கேட்டுப்
　　போய்விடில் புவன மீது
சோவென்று பெய்யு மன்னாய்!
　　துயரெமக் குண்டோ? வையம்
தாவென்ற போது தந்து
　　சரியென்றால் நிறுத்தி டாயோ?

அன்னைபோல் உலகைக் காக்கும்
அமுதமே ! அனேக நாட்கள்
உன்னையே நோக்கும் மக்கள்
உன்றனால் அழிவ தாமோ !
நின்னையே தெய்வ மாக
நினைத்திடும் இவர்கள் தம்மைப்
பின்னையேன் அழிக்கின் றாயுன்
பெருகிடும் வெள்ளத் தாலே.

பெய்கிறாய் நீரை அந்தப்
பேற்றினைப் பெற்ற மக்கள்
உய்கிறார் ; உன்னைப் போற்றி
உவக்கிறார் ; உள்ளம் வெம்பி
வைகிறார் வான மேநீ
வரம்பினை மீறும் போது
செய்கிற சேவை தன்னைத்
தேவையோ டாற்ற வேண்டும்.

வாயில்லை வயிறு மில்லை
வரும்பசிக் கொடுமை யில்லை
நோயில்லை நோவு மில்லை
நுகர்பொருள் தேவை யில்லை
காயில்லைக் கனியு மில்லை
கடவுளின் படைப்பி லென்றால்
நீயில்லை யென்று யார்தான்
நிலத்திலே வருந்து வார்கள்.

# மலை அருவி

மஞ்சுசூழ் மலையாள் ஈன
மழையமு தூட்ட மாந்தி
நெஞ்சினுல் தவழ்ந்து செல்ல
நிலமுனைத் தாங்கிக் கொள்ளப்
பஞ்சுபோல் திரையெ ழுப்பிப்
பாறைகள் பலக டந்து
அஞ்சுத லின்றிச் செல்லும்
அன்னையே வாழி! வாழி!!

மலையிடை மகிழ்ந்து முல்லை
மணலிடைத் தவழ்ந்து கன்னல்
விளைந்திடும் மருதத் தூடே
விருப்புட ஞேடி யாடித்
தொலைவினி லிருக்கும் நெய்தல்
தொழுதிடத் துன்பம் போக்கி
அலைகடற் கணவன் தன்னை
யடைந்திடும் அன்னுய் வாழி!

மலைவளர் சாந்தம் கோங்கு
மருவிடும் அகிலும் மற்றும்
விலையிலாப் பொருட்க ளோடு
விரைசெறி மலர்கள் எல்லாம்
தலையினிற் சுமந்து சென்று
சாரலில் வீசும் நாற்றம்
தொலைவினில் கமழச் செய்யும்
தூயஎம் தாயே வாழி!

நாட்டினிற் பயிர்கள் வாழ
நாளுமே அமுதை ஊட்டி
வாட்டிடும் பசியைப் போக்கும்
வள்ளலாந் தன்மை யோடு
கேட்டினைக் கொடுக்கும் பேதம்
கீழவ ரிடத்துங் காட்டா
தீட்டருங் கருணை யுள்ளாய்
என்றுமே வாழி! வாழி!!

காரிடைப் பிறந்த தண்ணீர்
கழுவிடக் கரைந்து வந்த
ஊரிடை யழுக்கை யெல்லா
மொருநொடிப் பொழுதிற் போக்கிச்
சீருட னிலங்கு முன்றன்
செயலினை நினைக்கும் போது
பாரிடை யுன்னைப் போலப்
பயனுள செய்வார் யாரோ?

ஒய்விலா யாத்தி ரைசெய்
துலகுயி ரூட்டு முன்றன்
காய்விலா வுள்ளங் கண்டும்
கடமையை மறக்கும் மக்கள்
தேய்விலா வாழ்க்கை காண்டல்
திருவருள் இல்லா தாஞேர்
மாய்விலாச் சுவர்க்க வாழ்வை
மனத்திஞல் நினைத்த லொக்கும்.

*

# ஆறு

---

விண்மீன்கள் விளையாடும் மேகங் கிழிக்கும்
விளைகின்ற மணிமுத்தோ டகில்சந்த னஞ்சேர்
மண்மங்கை முலையான மலையிற் பிறந்து
மலர்கொண்டு விளையாடி முல்லை தவழ்ந்து
உண்கின்ற பொருளாக்கு முழவர்க் குவந்த
ஒப்பற்ற திருவாகி மருதம் நடந்து
கண்ணென்ன மலர்கின்ற கருநெய்தற் காடாம்
கானல் கடக்கின்ற கன்னிப்பெண் ணேகேள் !

பேறென்று உலகத்தில் உனையல்லால் ஒன்றைப்
பெரியோர்கள் கொள்ளார்கள் பொய்யன்று உண்மை
வீறென்று கொண்டிந்த விரைவோடு நாளும்
விளைகின்ற பயிர்வாழ விருப்போடு நீயும்
மாறென்று மில்லாத மழையன்ன வாறு
மண்மீது தவழ்கின்ற மகிழ்வொன்று போதும்
ஆறென்று பெயர்கொண்ட அமுதான அன்னய்
யாரிந்தப் பெயர்தந்த தறிவிக்க வேண்டும்.

ஆறென்ற சொல்லினை ஐந்திற் கடுத்த
அழகான பெயரென்பர்; வழியென்றுஞ் சொல்வர்!
ஆறாத சினமெம்மை யடைகின்ற போது
ஆறென்பர்; ஆத்திரங் கொள்ளாதே யென்பர்
வேறாக வேறாகப் பொருள்கொள்ளு வோர்கள்
வினையாகப் பெயராக விதித்தேவைத் தார்கள்
சோறூட்டு மன்னைக்கும் மேலான தாயே!
சொல்லாயோ ஆறென்று பெயரிட்ட தாரோ?

விரைவோடு மலைநின்று விரைகின்ற உன்றன்
விருப்பத்திற் கிடையூறு விளைக்கின்ற கற்கள்
தரைமீது பலகால மிருக்கின்ற போதும்
தலைமீது நீயேறித் தவழ்கின்ற தாலே
நுரைக்கின்ற அலையோடு நோவின்றி நித்தம்
நுழைகின்ற முல்லையில் நுகர்கின்ற மாந்தி
கரையெங்கு மழகுள்ள பயிர்பச்சை வாழும்
கவினுள்ள மருதத்தி னூடே நடந்து;

மெதுவாகச் சூல்கொண்ட வொருபாம்பு போல
மிக ''ஆறி'' நெய்தற் பரப்பிற்செல் கின்றாய்
புதிதாக மலைநின்று வருகின்ற வேகம்
புனலுக்கோ முடிகின்ற போதெங்கு மில்லை
அதனாலே பெரியோர்கள் உன்தன்மை காட்டி
'ஆறுங்கள் நதிபோல' என்றேசொல் வார்கள்
இதனாலே ஆறென்ற பெயர்நீபெற் றாயோ?
இல்லையேல் வேறென்ன காரணந் தானோ?

# விண்மீன்கள்

---

நீல வானம் எழிலோடு விளங்கிட
நித்திலம் சிந்தியதோ
ஆல கால விசந்தன்னில் அமுதத்
துளிகள் சிதறினவோ.

வான வெளிதனி லேமலர்ப் பந்தல்
விரித்தே யிருக்கிறதோ
வானவ ரானவர் மேதினி மீது
வழங்கிடும் பூமழையோ.

வெண்மணி கள்நீலக் கம்பளம் மீது
விளங்கும் அழகிதுவோ
பெண்மணி கள்கருங் கூந்த லிலங்கும்வெண்
மல்லிகை மொட்டுகளோ.

ஆழக் கடல்தனி லேயுள்ள முத்துக்கள்
அத்தனையு மெழுந்து
வேழத்தின் தந்த மிலங்குதல் போற்பெரு
விண்ணில் தெரிவனவோ.

தேவர்கள் பட்டண மீது ஒளிர்ந்திடும்
தீபங்க ளின்ஒளியோ
ஓவர்கள் தீட்டிய சித்திரங் கள்ஒளி
தந்திடுங் காட்சிகளோ.

பண்டிகை கொண்டாடும் வானவர் அங்கே
கொளுத்திடும் வாணங்களோ
தண்டிகை மீது இறைவன் வரஅவர்
சாத்திடும் பூத்திரளோ.

பக்தி யுடன்மலர் சாத்தி இறைவனைப்
போற்றிடும் பக்தர்குழு
முக்தி பெறுமிட மென்ன விளங்கிடும்
மோட்சத் திருவொளியோ.

மீனவர் பெற்ற குழந்தைகள் வீசி
மகிழ்ந்திடும் முத்துகள்போல்
வானவர் ஈன்ற மழலைகள் சிந்திய
ரத்தினக் கற்குவையோ.

ஊடல் மகளிர் களைந்து எறிய
உதிர்ந்த மலரிதழ்போல்
ஆடல் மகளிர் அணிந்த மணிகள்
அவிழ்ந்து சிதறினவோ.

தூரத் திருக்கும் நகரத் திடையொளிர்
மின்சார தீபங்கள்போல்
ஆரத் தெரியுமிவ் வண்ட வெளியின்
அழகிற்கு என்னசொல்வேன்.

அண்ட வெளியிடை யில்ஒளி வீசும்
அழகுவிண் மீன்களைநான்
கண்ட பொழுதெழு கற்பனை கள்; என்
கவிக்குள் அடங்கிடுமோ ?

*

# தமிழ்க் காதல்

சங்கமணம் வீசுதமிழ் மாது — புவி
எங்குமெழி லோடிலங்கும் போது — தமிழ்ச்
சிங்கம் நிகர்காளே யர்கள்
தங்கள் மொழியை மறத்தல் தீது — இதை
ஓது.

ஆரியர்கள் தந்தமொழி யென்று — சில
பூரியர்கள் சொல்லுகிறுர் இன்று — தமிழ்ப்
பாரி வள்ளல் குன்றிளேப்
படைப்ப லத்திஞல் வளேத்த வாறு — பெரும்
மாறு.

பல்மொழியைத் தந்ததமிழ் மாது — அவள்
பாங்கினில் இருக்களவள் தோது — பிறர்
சொல்லு வதும்துள் ளுவதும்
தூய தமிழ்மா தினுக்கா ஏதம் — தரும்
பேதம்.

பாரதியைத் தந்தவளெம் அன்னை — தமிழ்ப்
பாவலரை ஈந்தனளே முன்னை — தெரு
வோர மதிலே யிருந்து
ஓல மிட்டால் லாபமில்லை எண்ணு — வழி
பண்ணு.

கன்னல்மொழி கற்பதற்குப் பாகு — கம்பன்
காத்தமொழி யைக்காக்க ஏகு — பல
இன்னல் வந்து சூழ்ந்திடினும்
எங்கள் மொழிக்காய் உயிரை ஈதல் — தமிழ்க்
காதல்.

*

# ஒரு மணி

செந்தமிழ் வாழச் சிந்தையி லெண்ணஞ்
சிறிது மிலாதவ ராக
எந்தையர் தமிழர் இனிப்பது தமிழே
என்றுமே பேசிய வண்ணஞ்
சொந்தமா யொன்றுஞ் செய்திட வொண்ணுச்
சோம்பலுக் கேயிரை யாகும்
நந்தமி ழர்க்கோ நானில மீது
நன்மைகள் தோன்றுவ தென்றோ?

வில்லினில் வீரர் வினைகளில் தீரர்
வேண்டிய புகழுடை யோர்கள்
மல்லினில் வல்லர் மனையறங் காக்கும்
மாண்புடை யோர்மதிப் புள்ள
கல்வியில் மேன்மை கலைகளில் வன்மை
கண்டவர் நாமெனக் கூறும்
சொல்லினில் வல்லோர் துள்ளுவ தல்லால்
தோன்றிடு பயனென் றுண்டோ?

உழைத்திடல் வேண்டும் உலகினில் தேன்பால்
ஓடிடச் செய்வீ ரென்றே
அழைத்தவோர் மேடை யதறிடப் பேசும்
ஆக்கமி லாதவ ரோடு
பிழைப்பினை விட்டுப் பிறரடி தொட்டுப்
பிழைப்பவ ருள்ளத னாலே
தழைப்பது சோம்பல் சரிவது மானம்
தமிழர்கள் வாழ்க்கையீ தன்று.

தாய்மொழிப் பற்றும் தன்னினப் பற்றும்
தன்னுயிர் நாட்டினைப் பேணும்
மாய்விலாக் காதல் மடிவிலா வூக்கம்
மாசிலாச் சேவைய தோடு
காய்விலா அன்பு கற்றவர் நண்பு
கலைகளைப் போற்றிடும் பண்பு
ஒய்விலாத் தூய வொழுக்கமு முள்ளோர்
உலகினுக் கோர்மணி யன்றோ ?

*

# தமிழருக்கு

வாழையடி வாழையாய் இந்த மண்ணில்
　　வரலாறு காணாத காலந் தொட்டே
கீழைநாட் டார்க்கெல்லாஞ் சிறப்பை யீட்டிக்
　　கீர்த்தியுடன் வாழ்ந்திட்ட தமிழா! இன்று
கோழைகளாய்க் குள்ளநரிக் கும்ப லாகக்
　　குன்றிமணி யளவேனும் வீர மின்றி
ஏழைகளாய் எடுப்பார்கைப் பிள்ளை யாக
　　இருப்போரைப் போல்நீயும் வாழ லாமோ?

மூவேந்தர் பரம்பரையா? முச்சங் கத்தில்
　　முழங்கியது முன்தமிழா? முற்றுங் கற்ற
பாவேந்தர் போற்றியபண் புனக்கு முண்டா?
　　பழந்தமிழர் வழியாநீ? பலநா ளாக
நாவேந்தர் நாவினிலே நடன மிட்ட
　　நற்றமிழன் புகழ்நாக ரீக மெங்கே?
பூவேந்த ரோடுபல புலவர் நித்தம்
　　போற்றிவழிப் பட்டதமிழ்ச் சாதி யெங்கே?

தலைகொடுக்க முன்வந்த குமண வள்ளல்
தன்மகனைக் கன்றிற்காய்க் கொன்ற சோழன்
சிலையெடுத்த சேரன்; தான் செய்து விட்ட
சிறுபிழைக்காய்க் கைதுணித்தபாண்டிமன்னன்
கொலைபுரிந்த குற்றத்தை உணர்ந்த போதே
கூடான நெடுஞ்செழியன்; கொண்ட மானம்
தலையான தென்றுதன் னுயிரைத் தண்ணீர்
தரத்தாம தித்தவுடன் நீத்த வேந்தன்—

தேனொழுகுஞ் செந்தமிழர் இவர்க ளென்று
செப்புகிறாய் சிறப்பேது முனக்கு முண்டா?
மானமுள்ள இத்தமிழர் மரபில் வந்த
மதிப்புள்ள தமிழாஉன் தகைமை என்ன?
போனகதை பேசுகிறாய் புதிதாய் ஏதும்
புரிந்தனையா? பேடிகள்போல் இந்த மண்ணில்
நானுமொரு தமிழனெனக் கூறிக் கொண்டு
நாணமின்றி வாழுகிறாய் நன்று! நன்று!!

இல்லையென்று வந்தவனுக் கிந்தா வென்று
ஈத்துவக்கு மின்பமதைக் காண வேண்டும்
நல்விருந்து நாள்தோறும் இல்லந் தன்னில்
நடத்தியதிற் பேரின்ப மடைய வேண்டும்
கல்விதனில் மூத்தவரைப் பேண வேண்டுங்
கண்ணியத்தைக் கண்ணாக எண்ண வேண்டுஞ்
சொல்லுடனே செயலொன்ற வாழ வேண்டும்
தூயதமிழ் மக்களது வாழ்க்கை யீதே!

அன்பிற்கே பணிகின்ற தன்மை வேண்டும்
ஆணவத்தைப் பணிகின்ற அச்சம் வேண்டாம்
நன்மைபுரி கின்றவுளம் நாளும் வேண்டும்
நசுக்குகிற எண்ணமணு வேனும் வேண்டாம்
தன்னலமி லாதவுயர் தொண்டு வேண்டும்
தனக்காக வாழ்கின்ற வாழ்வு வேண்டாம்
நன்றிமற வாதகுண மிருக்க வேண்டும்
நாட்டினப்பற் றில்லாதார் நமக்கு வேண்டாம்!

தாய்நாட்டுப் பற்றில்லான் தமிழ னல்லன்
தமிழனென்று சொன்னாலும் நம்ப வேண்டாம்
தாய்நாட்டை உணராத தமிழ னுக்குத்
தாயேது? தன்மான உணர்ச்சி யேது?
வாய்விற்று வயிறுபிழைக் கின்ற இந்த
வஞ்சகரால் தமிழர்குலம் அழிந்து போகும்
மாய்கின்ற தமிழாநீ உயர வேண்டில்
மற்றவனைச் சுரண்டுவதை நிறுத்த வேண்டும்!

யார்நல்ல செய்தாலும் போற்ற வேண்டும்
யாம்செய்ய வேண்டுமெனும் நியதி யில்லை
நேருக்கு நேர்பேசித் தீர்க்க வேண்டும்
நேர்மையொடு வாய்மையெமக் கிருக்க வேண்டும்
ஊருக்கு மட்டுமுப தேசம் வேண்டாம்
உழைக்கின்ற எண்ணமுரு வாக வேண்டும்
பேருக்கும் புகழுக்கும் வாழ்கின் றோரால்
பாருக்குச் சற்றேனும் லாப முண்டா?

இந்நாளில் தமிழர்குணம் மாறிப் போச்சு
எல்லாமே சந்தர்ப்ப வாத மாச்சு
முன்னாளில் இருந்தகொடை வீர மில்லை
முத்தமிழ்மேற் பற்றில்லை முயற்சி யில்லை
செந்தண்மை யாளருக்கோ சிறப்பு மில்லை
செந்தமிழைக் காப்பவர்க்கோ துணையு மில்லைப்
பண்ணாட்டு நாகரீக மறிந்த இந்தப்
பழந்தமிழன் நிலையென்று மாறு மோதான்?

பாடுபடும் எண்ணமிலர் நமது நாட்டுப்
படித்தசிலர் உபகாரப் பணத்திற் சென்றே
நாடுபல சுற்றிநவ நவமாய்ப் பெற்ற
நல்லறிவை நல்வழியிற் செலுத்த வில்லை
ஏடுகளைத் தூக்குகிற இளைஞ ரெல்லாம்
இங்கிலீசுப் படமன்றி ஏதுங் காணார்
வீடுகளில் உள்ளசுவர் மதில்கள் தோறும்
வீண்வார்த்தை எழுதுவதே கண்ட மிச்சம்!

விஞ்ஞானத் துறையிலுயர் வடைய வேண்டும்
வேண்டுகிற பொருளனைத்தும் ஆக்க வேண்டும்
இஞ்ஞாலத் தொழிலனைத்து மறிய வேண்டும்
எத்தொழிலாய் இருந்தாலு மாற்ற வேண்டும்
அஞ்ஞான இருள்மூழ்கி அடுத்த வர்க்கு
அடிவருடும் எண்ணத்தை ஒழிக்க வேண்டும்
மெஞ்ஞானம் தமிழர்க்கு மீள வேண்டும்
மேதினியே கண்டெம்மைப் போற்ற வேண்டும்!

# பூம்புகார்

---

சோறுடைக்கும் சோழவள நாட்டில் தேன்பால்
    சொரிகின்ற காவிரித்தாய் சுகந்தம் மிக்க
வேறுவேறு வண்ணமலர்ப் போர்வை யாலே
    விஞ்சுகுளிர் மேனிதனைப் போர்த்த வண்ணம்
நாறுமுயர் சந்தனந்தக் கோலம் பூசி
    நாயகனை அணைகின்ற பூம்பு காரில்
ஆறுதலே யின்றியொரு நாள்அ லைந்து
    அந்நகர அழகமுதை அருந்தி னேனே.

குணகடலின் கோமகளாம் காவி ரிப்பூங்
    கொடியிடையாள் குறைகளிலாச் செல்வம் மிக்காள்
கணமேனும் ஓய்வில்லா வணிக ரோடு
    காட்சிதரு கின்றகடற் பட்டி னத்தாள்
மணவாளன் சோழனுக்கு மண்ணி லென்றும்
    மங்காத புகழீட்டித் தந்த மங்கை
அணியாக இருபாக்கம் கொண்ட நல்லாள்
    அவனிக்கே திலகமாய் அமைந்து நின்றாள்.

உள்ளத்தை ஈர்க்கின்ற உருவி ஞள்மேல்
உற்றபெருங் காதலிஞல் உலக மக்கள்
கொள்ளேகொள்ளே யாய்ப்பொருளேக் கொண்டு வந்தே
குவித்துமலே போல்வைத்துக் கொள்ளு வோர்க்குக்
கள்ளமின்றி விற்கின்ற இனிய காட்சி
காவிரிப்பூம் பட்டினத்துக் கடைகள் தோறும்
அள்ளியதென் நெஞ்சையங் காடி யோசை
அண்டவெளி பிளக்கவெழுந் தார்த்த தன்றே!

கட்டுகின்ற தறிதன்னே அசைத்து நிற்கும்
கரிபோல நாவாய்கள் கடலின் மீதே
பட்டென்றும் தந்தமென்றும் பாண்டி நாட்டுப்
பால்வண்ணத் தரளமென்றும் ஏற்றிச் செல்ல
இட்டமுடன் காத்திருக்கும் ஈடில் காட்சி
இறக்குமதி செய்கின்ற பொருளின் மாட்சி
தொட்டனவென் ஞுள்ளத்தைச் சுங்கம் பெற்றே
சோழனது புலிபொறிக்கும் துரித மென்னே!

பன்மொழியைப் பேசுகின்ற வணிகர் கூட்டம்
பனிமலேயில் புலிபொறித்தோன் பட்டி னத்தில்
மின்னனேய மாளிகைகள் கட்டி வைத்தே
மெச்சுமழ கூட்டியுள்ள சிறப்பி ஞேடு
கன்னல்மொழி யார்கோழி யோட்டும் போதும்
கணவரொடு ஊடல்புரி கின்ற போதும்
பொன்னணியை விட்டெறியப் பூமி மீது
போவோரைத் தடுக்கின்ற புதுமை யென்னே!

வண்ணமொடு சுண்ணமுயர் சாந்தந் தூய
வாடாத மலர்வாசப் பொருட்கள் விற்கும்
எண்ணரியர் உறைகின்ற வீதி கண்டேன்
எலிமயிர்க்கம் பளிபட்டுப் பருத்தி நூலால்
நுண்ணரிய ஆடைகள்நெய் கின்ேறார் வீதி
நுவலரிய பொன்னணிகள் மணிகள் விற்போர்
மண்ணிலுள தொழில்யாவுஞ் செய்யும் வல்லோர்
மறுகுபல மருவூர்ப்பாக் கத்திற் கண்டேன்!

அரசதெரு அழகான கொடித்தேர் வீதி
அந்தணர்கள் வேளாளர் அறவோர் வீதி
திரவியத்தை யீட்டுகிற வணிகர் வீதி
தேர்ப்பாகர் படைவீரர் சூதர் கூத்தர்
பரத்தையர்கள் பணிப்பெண்கள் பாண ரோடு
பற்பலரும் உறைகின்ற வீதி யாவும்
விரவுகின்ற பட்டினத்தின் பாக்கம் பார்த்தே
விண்ணவரு ரிதுவோவென் றெண்ணி னேனே!

சிலைபேசுஞ் சிற்பங்கள் சித்தி ரங்கள்
தேன்சிந்தும் பூம்பொழில்கள் செய்குன் றங்கள்
நிலையான நீர்நிலைகள் நெஞ்சை யள்ளும்
நிருத்தமிடும் ஆடலரங் கறக்கூழ்ச் சாலை
கலைதேர்ந்த யவனத்தார் கைவண் ணஞ்சேர்
கடிமனைகள் கோட்டைகள்கொத் தளங்கள் மற்றும்
தலையாய நூல்நிலையம் பட்டி மன்றம்
தக்ககலைக் கூடங்கள் யாவும் கண்டேன்.

பிறப்பில்லாச் சிவனுர்க்கும் செவ்வே ளுக்கும்
பெருமைமிகு கண்ணனுக்கும் பலதே வர்க்கும்
அறமோதும் புத்தருக்கும் சமண ருக்கும்
அமைந்துள்ள கோயிலொடு பள்ளி பார்த்தேன்
இறவாத புகழ்பூத்த மன்ற மைந்தும்
ஈடில்லாக் கோட்டங்கள் மண்ட பங்கள்
மறவீரர் உயிரீயும் பீடி கைகள்
மாநகரின் சிறப்போதித் திகழ்ந்த தன்ரூே!

உவமைசொல முடியாத சிறப்பு வாய்ந்த
உயர்ந்தவிழா இந்திரனுக் கெடுத்து நிற்கும்
புவனமிசை நாகரிக முதிர்ச்சி பெற்ற
புகார்நகரக் காதலர்பூம் புனலில் ஆடி
அவனிபுகழ் பட்டுப்பொன் னணிகள் பூண்டு
அழகுநகர் பவனிவரு கின்ற காட்சி
எவர்மனதை ஈர்க்காது? இன்ப லோகம்
இதுவன்றி இம்பருல கத்தி லுண்டோ?

பொய்யில்லைப் புரட்டில்லை வஞ்ச மில்லை
புன்னெறிகள் தீதில்லைப் பூச லில்லைச்
செய்கின்ற புண்ணியத்திற் கெல்லை யில்லைத்
தெய்வநெறி பேணுதார் யாரு மில்லை
மெய்வந்த சான்ருேர்கள் தவத்தின் மேலோர்
மேதினிக்கே நீதிநெறி வகுக்கும் வல்லோர்
பெய்கின்ற மழையன்னக் கொடையின் மிக்கோர்
பெருமைசொல என்னிடத்திற் புலமை யில்லை.

கற்புநெறி காதல்நெறி கடவா உள்ளக்
கடமைநெறி யாளர்சுய மான முள்ளோர்
தற்பெருமை நன்றியின்மை சமய பேதம்
சற்றேனு மற்றவர்கள் தமிழ்வ ளர்க்கும்
விற்பனர்கள் வேழம்பர் வீரர் தீரர்
விருந்தாற்றும் நல்லவர்கள் விளங்கு கின்ற
அற்புதமே யானபுகா ரழகைப் பார்த்தே
அவனிமிசை யுற்றபய னடைந்திட் டேனே!

*

## முப்பால்

முப்பாலை ஈந்ததமிழ் முனிவன் ; காலம்
மூன்றிற்குமேற்றபொருளாய்ந்து சொன்னேன்
எப்பாவ லர்க்குமுயர் வேந்தன் ; ஞாலம்
இருக்கும்வ ரைதமிழர்க் குயர்வு தந்தோன்
செப்பாத பொருளில்லை யென்று நல்லோர்
தினமேத்துங் குறளாரங் கோத்து வைத்தோன்
இப்பாரு ளோர்க்குவழி காட்டு கின்ற
இனியதமிழ் மறைதந்தோன் நாமம் வாழ்க!

இன்றியமை யாதகருத்(து) எவர்க்கு மேற்ற
இனிதான பொன்மொழிகள்; என்றும் வாழும்
பன்மணிகள் கோத்ததுபோற் பகுத்து வைத்த
பாடலமைப் போடுஅதி கார வைப்பு ;
நன்னெறியால், நானிலத்திற் கொளியை நல்கும்
நல்லமுழு மதிபோன்ற தன்மை வாய்ந்தே
இன்றமிழுக் கென்றுமணி கலனாய் நிற்கும்
இலக்கியமாங் குறள்நாமம் என்றும் வாழ்க!

அறமாய்ந்து பொருளாய்ந்து இன்ப மாய்ந்து
அதனாலே வீடுபெறு கின்ற மார்க்கம்
திறமாக நுவல்கின்ற செம்மை மிக்கத்
திருமறையைத் தந்தவருஞ் சிறப்பி னாலே
துறைபோகக் கற்றபே ரறிஞ ரெல்லாந்
தூயோர்க்குள் தூயனிப் பெரியா ரென்றே
அறைகின்றார் விழாக்காணும் மேடை தோறும்
அழகுதமிழ் வள்ளுவன்பேர் இனிது வாழ்க!

கல்வியிலான் கண்களிலான்; கற்றோர் பேச்சைக்
காதாரக் கேளாதான் காது மில்லான்
செல்வமிலான் சிறந்தபொரு ளிருந்த போதும்
தேவையறிந் தொருவர்க்கு முதவாத் தீயோன்;
இல்லையெனக் கைநீட்டி யிரத்தல் போன்ற
இழிவில்லை; இன்னாத செய்த பேர்க்கும்
நல்லவையே செய்யாதான் மனித னில்லை
நன்றிமறக் கின்றபே ருய்வ தில்லை.

இல்வாழ்வான் ஆற்றுகிற தரும மொன்றே
ஈடில்லாப் புண்ணியமாம்; இந்த வாழ்வில்
எல்லாமே துறந்துதவம் ஆற்று வோரும்
இறுதியிலே தஞ்சமிவ னிடத்திற் காண்பர்
கொல்லாமை கோள்சொல்லித் திரிந்தி டாமை
குணமில்லார் நட்பதனை விரும்பி டாமை
நல்லோர்கள் கேண்மையைத் துறந்தி டாமை
ஞாலமுழு தும்போற்றும் நீதி யன்றோ.

பொய்களவு காமமொடு புன்மை யான
பொருள்போக்கும் சூதினையும் புறக்க ணித்துச்
செய்கரும மாற்றுவதே சிறந்த வாழ்க்கைச்
சித்தாந்த மாகுமெனச் சாற்றி ஏற்ற
உய்தொழில்கள் யாவினிலும் உழவே மிக்க
உயர்வுடைய தாமென்று கூறி இந்த
வையகமே வாழவழி வகுத்து வைத்த
வான்புகழும் வள்ளுவனை வாழ்த்து வோமே.

ஆயகலை யாவுமறிந் தமைதி கண்ட
ஆன்றதமிழ்ப் புலவர்பெரு மானின் போதம்
தூயநெறி காட்டுகிற தென்று நாமோ
சொல்வதிலே பயனில்லை; தொடர்ந்து நித்தம்
தீயவழி நீக்கியுயர் சிறந்த மார்க்கம்
சித்திக்க வாழ்ந்துவர முயற்சிப் போமேல்
மாயவுல கஞ்சுவர்க்க மாகும்; தூய
மறைதந்த வள்ளுவனும் மகிழ்ச்சி கொள்வான்!

*

# எண்ணியெண்ணிப் பார்த்தேன் !

விண்வெளியைச் செய்மதிகள் நிரப்பு கின்ற
விஞ்ஞான மோங்கியுள்ள விந்த நாளில்
நண்ணரிய கலைஞானங் கற்றுத் தேர்ந்தே
நாகரிக நுனிநிற்கும் மனித கூட்டம்
எண்ணரியர் வாழ்கின்ற இந்த வையத்
தியல்பதனை எண்ணுகிற போதி லந்தோ
புண்ணுகு மென்நெஞ்சம் பூமி வாழ்வு
புரியாத புதிராக வுள்ள தேனோ?

புத்தபிரான் யேசுபிரான் புனித கீதை
போதித்த கண்ணபிரான் நபிக ளோடு
சத்தியமே தவருத சாந்த மூர்த்தி
தற்காலந் தந்தபிரான் காந்தி யண்ணல்
எத்தனையோ மார்க்கமுரைத் துள்ள போதும்
இங்குள்ளார் எள்ளளவுந் திருந்த வில்லைச்
சுத்தநெறி நடைமுறையில் தோன்று மட்டுந்
தூயநெறி ஏட்டிலிருந் தென்ன லாபம்?

தன்னலமே யுருவாக அமைந்தோ ரிந்தத்
தாரணியில் மற்றவனைச் சுரண்டி வாழும்
புன்னலத்தாற் பெரியோர்க ளாகின் றாரே
போலிகள்தா னிவ்வுலகில் வாழ லாமோ?
கன்மனமே கொண்டவரை, ஏழை சிந்துங்
கண்ணீரைக் காணாத கயவர் தம்மைப்
பன்மடங்கு செல்வத்தில் வாழ வைக்கப்
பாட்டாளி யேன்துயரப் படுகின் றானோ?

கரிசனையோ டீழமேதாய் நாடாய்க் கொண்டு
காய்கின்ற மந்தைகள்போற் கால மெல்லாம்
உரிமையுடன் தோட்டமதில் உழைத்து மேவெற்
றோடாகப் போய்விட்ட மக்கள் ஈழச்
சரித்திரத்திற் சஞ்சரிப்பர் என்ற போதும்
தன்னலமே கொண்டவர்தஞ் சதியிற் சிக்கித்
தரித்திரத்தி லிப்போது மாய்கின் றாரே
தம்முழைப்பிற் கேற்றபய னீது தானோ?

க்ல்வியில்லைச் செல்வமில்லைக் கணிப்பு மில்லைக்
கனத்தமழை காற்றிற்கோ வீடு மில்லை
பல்குபெரு நோய்தீர்க்க மார்க்க மில்லைப்
பணிந்துதொழில் புரிந்தாலு முயர்ச்சி யில்லை
மல்குமிருள் போக்குபவர் யாரு மில்லை
மனிதாபி மானமதை மேடை தோறுஞ்
சொல்பவரும் இம்மக்கள் துயரம் போக்கத்
துளியளவுந் துணிந்ததாய்த் தெரிய வில்லை.

வேதங்கள் ஆகமங்கள் சித்தாந் தங்கள்
வெளிநாட் டிலக்கியங்கள் ஆய்ந்து கற்ருேர்
யாதுமெம தூரிங்கே யாங்க ளொன்றே
யாவினுக்கு மோரிறைவ னென்றே சொல்வோர்
ஓதுபொது நீதியுரைத் துயர்வு தாழ்வு
உலகிலில்லை என்றுதினம் உரைக்கும் பல்லோர்
சாதிமத பேதமதை மறக்க வில்லை
சாத்திவைத்த கதவையின்னுந் திறக்க வில்லை.

சாதிவெறி சமயவெறி சற்று மில்லாச்
சன்மார்க்க சாந்திநெறி யோடு சேர்ந்த
நீதிநெறி தவருத நிலைத்து வாழும்
நேர்மையுள்ள சமுதாயம் ஒன்று தோன்றில்
ஆதிமுத லின்றுவரை யாட்டி வைக்கும்
அநீதங்கள் அணுவளவு மில்லா தோடும்
ஏதுவழி யித்தகைய சமூக மொன்றை
யேற்படுத்த வென்றெண்ணிக் கலங்கு கின்றேன்.

தந்தியினுல் வானெலியாற் செய்தித் தாளாற்
சணப்பொழுதிற் செல்கின்ற விமானந் தன்னுல்
இந்தவுல கஞ்சுருங்கி விட்ட தாலோ
இங்குள்ளோ ருளங்கூடச் சுருங்கிற் றம்மா!
சொந்தநாட் டாதிக்க வேட்கை யாலே
துப்பாக்கி பீரங்கி குண்டு கொண்டே
மந்தைகள்போல் மனிதாபி மான மின்றி
மன்னுயிரை மாய்க்குநிலை யென்று போமோ?

நாடுபசி பட்டினியில் வாடும் போது
நம்நாட்டி லேவிளைவைப் பெருக்க வேண்டிக்
காடுகளை வெட்டியுயர் கழனி யாக்கும்
கைங்கரியஞ் செய்யாது கற்ற தங்கள்
ஏடுகளை எந்நாளு மணைத்த வண்ணம்
இருக்கின்ற எம்தேச வாலி பர்க்குச்
சூடுசொர ணையெப்போ தோன்று மென்று
தொடர்ந்துநான் சிந்தித்தேன் தோன்ற வில்லை.

பதவிக்காய் பணத்திற்காய் பாராட் டிற்காய்
பந்தம் பிடிப்போர்கள்; பயனை நோக்கி
உதவிக்கு வருவோர்கள்; உறிஞ்சும் லஞ்சம்
ஓயாது பெறுவோர்கள்; உள்ளந் தன்னில்
நிதமுங்கு ரோதங்கள் நிறைந்த பேர்கள்;
நிலைபெற்ற நாட்டினைப் பற்றி லாதோர்;
சிதையுங் குருபத்தி யுள்ள நெஞ்சர்;
சிறிதேனு மில்லாத நாளெந் நாளோ?

ஈழமெம தென்றெண்ண முதிப்ப தெப்போ
எல்லோருஞ் சோதரராய் வாழ்வ தெப்போ
பாழுமின வெறிமாய்ந்து போவ தெப்போ
பக்திநெறி யோங்கியுல குய்வ தெப்போ
ஆளுமுரித் தெல்லோர்க்கு மாவ தெப்போ
ஆட்டுகிற மொழிச்சிக்க லோய்வ தெப்போ
நாளுமுயர் நீதிநெறி யோடு சேர்ந்த
நல்லபுது வுலகொன்று பிறப்ப தெப்போ?

நுண்கதிரை மேனியிலே பாய விட்டே
நோய்களையாய்ந் தறிகின்ற இந்த நாளிற்
கண்ணிழந்த பார்வைக்குங் காச நோய்க்குங்
கைகண்ட வழியுண்டு பண்ணி வைத்தோர்
மண்ணுலகில் விசமிகளை மாய்ப்ப தற்கோர்
மருந்தொன்றுங் கண்டிடாப் புதுமை தன்னை
எண்ணியெண்ணிப்பார்த்தேன் நான் இதுவரைக்கும்
எதுவும்வி ளங்கவில்லை யாரே சொல்வார்?

பதுளை பாரதி கல்லூரி 1987இல் நடத்திய அகில இலங்கைக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு தங்கப்பதக்கம் பெற்ற கவிதை.

*

# எங்கள் ஞானம்!

ஆழ மான கடலை யளந்ததும்
    ஆற்று நீரை மறித்தணை போட்டதும்
நீள மான பயணம தைச்சில
    நிமிட நேரம தாக்கி முடித்ததும்
கோளு லாவிடு வான மதிற்பல
    குட்டிச் செய்மதி செய்து விடுத்ததும்
வாழும் மாந்தரின் நோய்களை யும்பெரு
    வைத்தி யத்துறை யிற்சிறப் புற்றதும்;

மண்ணின் கீழே மறைந்து கிடந்திடு
    மண்ணெய் யோடு நிலக்கரி கண்டதும்
எண்ணி லாத சுரங்கம் அமைத்துமே
    ஈடி லாப்பெரும் பொற்குவை சேர்த்ததும்
பண்ணி சைத்திடு வானொலிப் பெட்டியும்
    பரவ சப்படுத் தும்படக் காட்சியும்
கண்ணி மைப்பதற் குட்பல காதங்கள்
    கடிது சென்றிடு தந்தி வசதியும்;

மின்னல் ஒத்திடு மின்விளக் குப்பல
வீதி தோறும் அமைத்ததும் மானிடர்
முன்னர் கண்டறி யாத புதுமையால்
மூடக் கொள்கை பலபறந் தோடவே
நன்மை செய்ததும் நானில மீதினில்
நாம டைந்த பெருஞ்சிறப் பாயினும்
என்ன கண்டனம் இப்புவி தன்னிலே
எங்கள் ஞானம் எமக்கழி வாகுதே.

மண்ணில் மாந்தரைக் கொன்று குவித்திடும்
மாபெ ரும்வலி வாய்த்த கருவிகள்
எண்ணி லாதன இன்று படைத்தனம்
இப்பு விக்கழி வோர்கண மீதினில்
கொண்டு சேர்த்திடும் குண்டுகள் செய்தனம்
குவல யத்தினுக் கூறு விளைத்தனம்
பண்டை நூல்தரும் நீதி மறந்தனம்
பாவஞ் செய்திடும் பக்குவம் பெற்றனம்.

அண்டை நாட்டைப் பிடித்திடு மாசையும்
ஆண வந்தரும் போரெனும் போதையும்
கொண்ட தேசரி யென்னுங் குறுகிய
கொள்கை யும்புவி மாந்தரை யாட்டியே
சண்டை கள்பல மூட்டுவ தால்இனிச்
சகம்பி ழைத்திடல் சாத்திய மில்லையே
குண்டெ றிந்து மகிழ வுலகமோர்
கோட டித்த விளையாட் டரங்கமா?

# ஏன் பிறந்தாரோ ?

நீறு பூத்த நெருப்பினைப் போல
நெஞ்சி லேபெரு வஞ்சக முள்ள
மாறு கொள்ளும் மனிதர்கள் வாழும்
மண்ணி லேபிறந் துய்வதெவ் வாறே
ஊறு செய்பவ ருள்ளத னாலே
உலக மேயொரு சாக்கடை யாகி
நாறு தேயிறை வாஇதைப் போக்க
ஞால மீதில் அவதரி யாயோ?

சேர்ந்து வாழ்வோர் சிறப்பினைக் கண்டு
சிந்தை யில்அழுக் காறது கொண்டு
சார்ந்து கொண்டவர் தன்மை யறிந்து
சமயம் வாய்க்கையி லேபகை மூட்டிச்
சோர்ந்த நேர மதைத்தம தாக்கித்
துரோக மேபுரி யுஞ்சில பேரைத்
தேர்ந்து நீக்க அறிவை யளிப்பாய்
சிந்தை யில்நட மாடு மிறைவா.

தொண்டு செய்வதெம் இலட்சிய மென்பர்
தூய சேவை புரிவதற் கென்றே
தண்டு வர்பொதுத் தாபன மொன்றில்
தக்க தோரிடம் பெற்றதன் பின்னர்
கொண்ட நோக்க மதிற்றவ றுது
கூடி யங்கிருப் போரறி யாது
சுண்டெ லிக்குணம் காட்டிடு வார்கள்
தொண்டு செய்வதற் காபிறந் தார்கள்?

தேரி லேவருஞ் சாமியைப் போலத்
தெருவி லேவரு மாசைய தாலே
வாரி யேதரு வோமென்று கூறி
வள்ள லாய்நடிப் பார்சில போலி
ஊரி லேஉத வாதவர் கூடி
உகந்த வாறு புகழ்பல பாடப்
பாரி லேபெரி யோரென வாழும்
பாத கர்தமை யேன்படைத் தாயோ?

மாலை போடப் பணமு மளிப்பர்
மற்ற வர்புகழ்ந் தேத்த மகிழ்வர்
பாலைப் போல வினிக்க வுரைப்பர்
பதுங்கி யேபுலி போலவும் பாய்வர்
காலைப் பற்றியுங் காரியஞ் செய்வர்
கைவ ராவிடில் காறி யுமிழ்வர்
ஆல கால விசமென வாழ்வர்
ஆண்ட வாஇவர் ஏன்பிறந் தாரோ?

# நடிப்பு

நாடறியும் ஊர்வலமாய்
நல்லடக்கம் பெறுவதற்காய்ப்
பாடையிலே ஒருபிணந்தான்
பயணமதைத் தொடங்கிறது.

கேடுகெட்ட உலகமிதைக்
கீழாக எண்ணியது
வாடுதுய ரின்றிமிக
வாகாகச் செல்கிறது.

செல்வத்தில் வாழ்ந்தவனும்
சேயொன்று மில்லானும்
எல்லோர்க்கு மீந்தவனும்
ஏமாந்து போனவனும்.

நடுங்குதுய ரோடுதினம்
நாவரண்டு மாய்கையிலே
பிடுங்கியுண்ட பேய்களெலாம்
பேசாமல் இருந்தனவாம்.

போய்விட்டான் என்றவுடன்
புலம்பியழு கின்ருர்கள்
நாய்மெத்த நல்லதடா!
நன்றியில்லார் மனிதரடா!

அழுகின்ருர் விழுகின்ருர்
ஆவிமிகச் சோர்கின்ருர்
எழுகின்ருர் தொழுகின்ருர்
ஏன்சென்ருய் என்கின்ருர்.

துடிக்கின்ருர் சுழல்கின்ருர்
துவள்கின்ருர் சோர்கின்ருர்
அடிக்கின்ருர் முறிகின்ருர்
அழகாக நடிக்கின்ருர்!

கறந்தோய்ந்த பிற்பாடு
கண்ணெடுத்தும் பாரார்கள்
இறந்தவுடன் ஒப்பாரி
எல்லோரும் வைப்பார்கள்!

## யார் ஏழை?

---

உண்பதற் குணவில் லாமல்
உடுப்பதற் குடையில் லாமல்
எண்ணருங் கவலை யாலே
என்பெழுந் தெங்குந் தோன்றக்
கண்வழி உயிரும் போகக்
கவலையால் உளமும் வேக
மண்ணிலே வாழ்வோர் மட்டும்
மாந்தருள் ஏழை யாமோ?

பொன்னொடு பொருளுஞ் சேர்த்துப்
பூமியில் நிலமும் வாங்கிப்
பன்னரும் வசதி யோடு
பலஅடுக் குள்ள வீடும்
துன்னரும் மதிலும் கட்டிச்
சுகத்தொடு வாழ்ந்த போதும்
இன்னலுற் றவனுக் கொன்றும்
ஈந்திடான் ஏழை தானே.

கலையொடு பலவுங் கற்றுக்
கற்பனை வளமும் பெற்று
விலையிலாப் பரிசோ டின்னும்
விருதுக ளனேகம் வென்றும்
அலைகட லென்ன ஆழ்ந்த
அறிவொடு திகழ்ந்த போதும்
மலையெனக் கர்வங் கொண்டான்
மனத்தினுல் ஏழை தானே.

நெற்றியில் நீற ணிந்தும்
நிறவுடை தான ணிந்தும்
சுற்றியே தேவன் தன்னைத்
தோத்திரஞ் செய்து கொண்டும்
முற்றுமே துறந்தோன் என்ன
மொழிந்திட நடிக்கும் இந்தப்
பற்றிலான் பார்க்கப் போனுல்
பக்தியில் ஏழை தானே.

# தேயிலைத் தோட்டத்திலே

தேயிலைத் தோட்டத்திலே — மக்கள்
சிந்தும் வியர்வையெலாம்
ஆயிரஞ் சேதிசொல்லும் — இதை
ஆய்ந்திட யாருமில்லை.

காய்கிறார் வெயிலிலே — தினம்
கண்கள் குளமாக
மாய்கிறார் துன்பமுடன் — மழையில்
மந்தைகளைப் போல.

ஓட்டைக் குடிசைகளில் — மழை
ஒழுகும் பொழுதினிலும்
நாட்டை வளம்படுத்தும் — இவர்
நலிவை யகற்றீரோ.

பஞ்சமும் பட்டினியும் — பணம்
படைக்கு மிவர்களுக்கோ
கொஞ்சமு மெண்ணீரோ — உற்ற
குறைகள் களையீரோ.

கல்வி யளிப்பதற்கோ — வழி
காட்டி வளர்ப்பதற்கோ
நல்லவர் இல்லையெனில் — இந்த
நாடு சிரிக்காதோ.

அட்டை கடித்தாலும் — உடல்
ஆட்டங் கொடுத்தாலும்
தொட்ட கருமமதைத் — தொடருந்
தூயோர்க் கிதுவிதியோ.

நாட்டிற்கு நல்லவரை — ஈழம்
நாடாகச் செய்தவரைப்
போட்டு மிதிப்பதுதான் — செய்யும்
புனிதச் செயலாமோ.

*

# முயற்சி

நாட்டிற் பிளவை வளர்ப்பவர்கள் — பெரும்
நாசம் புரிந்திடும் தீயவர்கள்
ஏட்டைப் படித்தென்ன லாபமடா — இவர்
எட்டி மரத்துக் கனிகளடா.

மெத்தப் படித்தவர் கோடியடா — பலர்
மேதினிக் கோபெரும் பாரமடா
சொத்தைக் கதைபல பேசிப்பேசி — இவர்
சோம்பல் வளர்ப்பதே மிச்சமடா.

உள்ளம் வளர்ச்சி அடையவில்லை — புவி
ஒற்றுமை இன்னுமோ காணவில்லை
வெள்ளம் போலேபெரும் சிக்கலடா — இதை
வெட்டி விடுபவர் இல்லையடா.

மாடி மனேகளேக் கட்டியென்ன — தினம்
மண்ணேயும் விண்ணேயும் ஆய்ந்துமென்ன
கூடி யிருக்க வழியறியார் — கொல்லும்
குண்டுகள் கண்டதே மிச்சமடா.

ஒட்டுண்ணி போல இருப்பவரை — இவ்
வுலகைச் சுரண்டியே வாழ்பவரை
விட்டுவைத் தாற்பெரும் பாவமடா — இந்த
வீணரால் என்னதான் லாபமடா.

பூமி யிருக்க வளமிருக்கப் — பல
புத்தம் புதிய வழியிருக்க
சாமியை நம்பி இருப்பதோடா — அவன்
தானுக வந்துன்னேக் காப்பனேடா.

முயற்சி திருவினே யாக்குமடா — இது
முப்பாற் குரியவன் போதமடா
உயர்ச்சி அளித்திடும் மார்க்கமடா — இதை
ஓர்ந்தவ னேபுத்தி சாலியடா.

⁂

# திருநாள்

எழில்பொங்கு மீழவள நாட்டு மக்கள்
எல்லோருஞ் சோதரராய் வாழு கின்ற
அழகான நாளேநல் லமிர்த நாளாம்
அந்நாளி லேபோட்டி பொறுமை யாலே
பழிவாங்கு மெண்ணங்கள் பகைமை வஞ்சம்
பண்பிலாச் செயலோடு பஞ்சம் நல்கும்
இழிவான கருமங்கள் இருக்க மாட்டா(து)
இந்நாளே யாம்வேண்டும் திருநா ளாகும்.

பொங்கிவரும் மகாவலியின் கரையில் உள்ளப்
பொலிவோடு பூத்தநல் லெண்ணத் தோடு
சிங்களருந் தேன்தமிழைப் பேசு கின்ற
செந்தமிழ ருஞ்சேர்ந்து வாழ வேண்டும்
பங்கமின்றி இந்நாட்டு முஸ்லிம் மற்றும்
பறங்கியரும் பலதேச மக்க ளெல்லாம்
இங்கேயோர் கொடியின்காய் போல வாழும்
எந்நாளோ அந்நாளெம் திருநா ளாகும்.

மொழிச்சிக்கல் மதச்சிக்கல் மூட ராலே
முதிர்ந்திட்ட சாதிவெறி யாவு மோய்ந்து
வெளித்திட்ட பகல்போல ஈழ நாடு
வெள்ளையுளங் கொண்டவரால் நிறையும் நாளிற்
பழிபாவம் பகலவன்முன் பனியைப் போலப்
பறந்தோடும் பண்பாடே யோங்கும்; இந்த
அழகான நாள்அண்மை தனிலே யுண்டு
அந்நாளே யாம்வேண்டும் திருநா ளாகும்.

எந்தவொரு மூலையிலே பிறந்த போதும்
ஈழத்தா னென்றபெரு நோக்கத் தோடே
சொந்தநாட் டின்னல்களை கின்ற பேரே
தூயவராம், துளியேனுஞ் சோம்ப லின்றி
எந்தையர்கள் போலுழைத்து வாழ்ந்தால் இங்கே
இருக்கின்ற பணச்சிக்கல் மடிந்து போகும்
அந்தவொரு நாள்தூரந் தனிலே இல்லை
அந்நாளே யெம்நாட்டின் திருநா ளாகும்.

ஆசைதனை வென்றவனும் அகிம்சா மூர்த்தி
ஆடுபலி தடுத்திட்ட அண்ணல் புத்தர்
நேசமுடன் மக்களுக்காய் உயிரை விட்ட
நிர்மலனும் யேசுபிரான் நெடுநாட் தொட்டே
தேசமெலாம் புகழ்கின்ற சைவ நீதிச்
சீரியர்க ளோடுநபி நாத ரீந்த
ஆசிலாப் பொதுநீதி போற்றி வாழும்
அந்நாளே ஈழத்தின் திருநா ளாகும்.

# தேசமே வீடு

தேனாறு பாலாறு பாயுஞ் செல்வச்
சிறப்புள்ள நாடாக ஈழம் தன்னை
ஏனுக்க முடியாது இங்கே யுள்ள
எவராலும் ஆகாது என்ற வெண்ணம்
போனாலே போதும்பின் புதிய வாழ்வு
பொலியாதோ பொருளெல்லாம் புசிப்ப தற்கே
தானாகக் கிடையாதோ தரித்தி ரந்தான்
சற்றேனும் இல்லாமல் ஓடி டாதோ.

கல்லூரி வாசல்தனை மிதித்த பின்னர்
காற்சட்டை போட்டதொழி லன்றி வேறு
நல்லதொழி லெதுவாக இருந்த போதும்
நாடாத வாலிபரால் நமது நாடு
அல்லலுறு கின்றதென மேடை தோறும்
அழுவோரும் அறிக்கைபல விடுகின் றோரும்
சொல்வதன்றிச் செயலேதும் செய்வ தில்லை
சுரண்டுகிற எண்ணத்தை விடுவ தில்லை.

எங்குசென்று பார்த்தாலும் லஞ்சம்; இஃதை
எடுப்போருங் கொடுப்போரும் இல்லை யானல்
பங்கமிலா திங்குள்ள கரும மெல்லாம்
படிப்படியாய் நிறைவேறும் பண்பு மோங்கும்
தங்களது காரியத்தைத் தாமே சென்று
தடையின்றிச் செய்துவர முடியும்; ஆனல்
இங்குள்ளோர் உளமின்னும் மாற வில்லை
இருக்கின்ற சிக்கலொன்று மோய வில்லை.

காளையருங் கன்னியருங் கழனி தோறுங்
கன்னலொடு செந்நெலினை விளைக்க வேண்டும்
பாளைநிறை தெங்கோடு நுங்கு பாக்குப்
பார்த்தவிட மெங்குமழ கூட்ட வேண்டும்
வாழைபலா மாதுளைதேன் தோடை யாதி
வளத்தாலே யெம்நாடு சிறக்க வேண்டும்
வேளைதவ ருதுதொழி லாற்ற வேண்டும்
வெறும்பேச்சு வீரரிலா தொழிய வேண்டும்.

உழைத்துண்ண வேண்டுமெனும் எண்ண மிங்கே
யுருவாகா திருக்கின்ற வரைக்கும் மக்கள்
பிழைக்கின்றார் என்றிட்டால் அதிற்பா திப்பேர்
பிறராலே வாழ்கின்றா ரென்ப தாகும்
இளைக்கின்ற தேகத்தோ டெலும்பாய்ப் போகும்
ஏழைநிலை யுயர்வாக வேண்டு மானல்
திளைக்கின்ற செல்வத்தில் இருப்போ ரெல்லாம்
தேசத்தை வீடாக எண்ண வேண்டும்.

# நீதி

சீறும் சிங்கங்கள் போல எழுந்தே
சேரு வீர்திர ளாக ஒருங்கே
நாறு மிந்த அடிமைத் தளையை
நாட்ப னியெனப் போக்கிடு வீரே
வேறு காரியஞ் செய்திடு வேளை
வீண ரிட்ட விலங்கை அறுப்பீர்
சாறி லாதவோர் சக்கைய தாகச்
சகத்தி லேநலி வுற்றிட வேண்டாம்.

அடிமை யென்னும் பதத்தை அறிவீர்
அந்த வாழ்விலே துஞ்சிடு கின்ற
கொடுமை தன்னை அனுபவிக் கின்றீர்
கூறும் நல்ல சுதந்திரம் காணீர்
கடுமை யாக உழைத்து உயிரைக்
காக்க மட்டும் பொருளை எடுத்து
மிடிமை தன்னில் அழிந்திடு கின்றீர்
மிச்சம் யாரோ சுவைத்திடு கின்றார்.

தொட்டில் நின்று சுடுகாடு மட்டும்
சுயந லம்அணு வேனு மிலாது
அட்டை போல இரத்த முறிஞ்சும்
அயோக்கி யர்க்குநீர் ஏனுழைக் கின்றீர்?
பட்ட வேதனை போது மினிமேற்
பாடு பட்டுமைக் காத்திடு வீரே
கொட்டும் தேனிகள் போல எழுவீர்
கொட்ட மட்டு மனுமதி யாதீர்.

புதைத்து வைப்பவன் வாழ்ந்திடு கின்றான்
பொருள்ப டைப்பவன் தாழ்ந்திடு கின்றான்
எதைப்ப டைத்து முடிந்த பிறகும்
இலாப மின்றியே னேகொடுக் கின்றாய்?
உதைத்து வாங்குவான் என்று பயமா?
உன்றன் ஆற்றலை நீயறி கில்லாய்
விதைத்த வன்அறுக் கின்றதே நீதி
வேறொ ருத்தனுக் கென்ன உரிமை?

(ஷெல்லியின் கவிதை ஒன்றினைத் தழுவியது)

*

# மனிதனும் பறவையும்

பரந்தவோ ரால மரத்திலோர் கிளையில்
　　பட்சிகள் இரண்டொரு மித்து
நிரந்தர மாக விருந்தன காதல்
　　நிரம்பிய வாழ்க்கைய தாகும்
மரந்தனில் முட்டை மறைவினி லிட்டு
　　மகிழ்வொடு பெற்றதம் குஞ்சைத்
தரந்தர மான வுணவினு லூட்டித்
　　தம்முயிர் போலவே பேணி—

வரும்பொழு தந்த வழகிய குஞ்சோ
　　வளர்ந்தது வனப்புடன் நாளும்
அரும்பிய சிறகும் அழகிய அலகும்
　　அதன்துணை யாகவே யோர்நாள்
விரும்பிய வண்ண முணவினைத் தேட
　　விழைந்தது; பறந்தது வெளியே
பெரும்பசி போக்கப் போயிரை தேடல்
　　பிறகதன் கடமைய தாச்சு.

இப்படி யாக விதனது காலம்
ஏகிடு நாளையில் ஓர்நாள்
செப்பிடு காதல் வசத்தினில் மூழ்கிச்
சேர்ந்தவோர் துணையுடன் கூடி
ஒப்புட னுல மரத்தினை நாடி
ஒருசிறு கூட்டினைக் கட்டித்
தப்பித மின்றி வாழ்ந்திடும் ; தந்தை
தாயரின் தடையெது மின்றி.

பறவையைப் போல வுணவினைத் தேடும்
பண்புநம் வாலிபர்க் கில்லை
சிறப்புடன் சீட்டும் சீகறற் பீடி
திரைப்படத் தோடலங் காரம்
வறுமையே வரினும் குறைத்திட மாட்டார்
வையகத் தியல்பறி யாதார்
திறமையாய் மட்டுந் திருமணந் தன்னைச்
செய்கிறார் பட்சிகள் போலே.

*

## காதல் இசை

ஆற்ருேடு சுனைசேரும் ; ஆருே ஓடி
ஆழ்கடலை முத்தமிடும் அவனிதோறும்
காற்ருேடி மெய்தழுவிக் கருத்தை யீர்த்துக்
காதலிசை பாடியுள முருக வைக்கும்.

வானத்தை முத்தமிடும் வரைகள் வந்து
வந்தடிக்கும் பேரலைகள் ஒன்றை யொன்று
ஆனந்த மாய்த்தழுவிக் கொள்ளும் காட்சி
அழகுமலர் இன்ெனென்றை அணைக்கும் மாட்சி.

பூமகளை ஆதவனும் பூரிப் போடு
பொற்கரத்தி னுல்தழுவிக் காதல் கொள்ள
மாமதியும் ஆழ்கடலை முத்த மிட்டே
மண்மீதில் தண்ணெளியைப் பரப்பி நிற்கும்.

பயிரின்றி வயலில்லை; பரந்த நீரின்
பரப்பின்றிக் கடலில்லை; பாரு மில்லை
உயிரின்றி உடலில்லை உலக மீதில்
ஒன்றின்றி ஒன்றில்லை உண்மை யன்றோ.

கொம்புதழு வாக்கொடிக ளேது முண்டோ
கூடிவா ழாவுயிர்கள் தானு முண்டோ
அம்புவியின் இயற்கையிது; ஆகை யாலே
ஆரமுதே நீயென்னை மறுக்க லாமோ?

இயற்கையெனும் தாய்மடியில் தவழு கின்ற
எப்பொருளுந் தனியாக வாழ்வ தில்லை
செயற்கையமைப் பாலிவற்றைப் பிரிந்து வாழச்
செய்வதிய லாதிந்தச் செகத்தி லம்மா.

செய்யமலர்ப் பாவாய்நீ சேர்ந்து முத்தம்
தித்திக்க வேஅளிக்கத் தவறி விட்டால்
வையமிசை யுள்ளபொரு ளனைத்தும் முத்த
மாரிபொழி கின்றதனு லிலாப முண்டோ?

(ஷெல்லியின் Love's Philosophy என்ற
கவிதையைத் தழுவியது

## நியாயமா ?

---

சென்ற நினைவுகள் சிந்தையில் — நல்ல
ஜீவிய ஓவிய மாகவே
நின்று நடம்புரி கின்றன — என்றன்
நெஞ்சத்தை யும்அரிக் கின்றன.

அன்பிற் பெரியவர் பெற்றவர் — என்னை
ஆக்கப் பெருந்துயர் உற்றவர்
இன்ப துன்பங்களைக் கற்றவர் — என்மீ(து)
எந்தக் கசப்புமே யற்றவர்.

ஆசைக்கு வேலி அமைக்கட்டாம் — அட
அன்பிற்குக் கல்லறை கட்டட்டாம்
காசுக்குக் காதலை விற்கட்டாம் — என்னைக்
காத்திருப் பாளைத் துறக்கட்டாம்.

பெற்றவர் சொல்வது நியாயமா — அவர்
பேராசை செய்யும் உபாயமா
மற்றவர் தூண்டிய மாயமா — எங்கள்
மாசற்ற காதல் அபாயமா ?

பெற்றவர் பேச்சைத் துறப்பதா — காதல்
பெண்மணி யாளை மறப்பதா
தற்கொலை செய்தே இறப்பதா — செய்த
சத்தியங் காத்துச் சிறப்பதா ?

காவியக் காதலைப் போற்றிடும் — உண்மைக்
காதலைப் பூமியில் தூற்றிடும்
பூவுல கத்தவர் புத்தியை — எங்கு
போட்டுக் கொளுத்துவன் ஈசனே !

*

# இன்னலைத் தராதே!

குன்றின் அருவியுள்ள — அக்
குறிஞ்சி நிலத்தினிலே
தென்றல் தவழ்ந்துவரும் — நல்ல
சீதளப் பூஞ்சோலை!

பூக்கள் இதழ்விரிக்கும் — தேன்
பொழிய நிலம்வழுக்கும்
ஈக்கள் இனிமையுடன் — மகிழ்ந்
தெங்கு மிசைபரப்பும்.

கிளிகள் விளையாடும் — தென்னங்
கீற்றி லவையாடும்
அளிகள் மதுச்சேர்க்கும் — ஆங்கு
அணில்கள் பழங்கோதும்.

காரும் வெயில்போக்கும் — இளங்
காற்றும் உறவாடும்
சாரு மிருவருக்கோ — மகிழ்வு
தாண்டவ மாடிநிற்கும்.

சிந்தை குளிர்ந்துவிடும் — துயர்
சென்று மறைந்துவிடும்
சுந்தரச் சோலையிலே — மனம்
சொக்கி யிருக்கையிலே. —

சென்ற நிகழ்ச்சியெலாம் — மனத்
திரையில் எழும்புகையில்
என்று மிலாதவொரு — துயர்
ஏற்படு தென்மனத்தே.

ஓடும் அருவியிலே — உளம்
ஒட்டி யிருக்கையிலே
பாடும் குயிலோசை — ஒரு
பாச மதையெழுப்பும்.

ஆடும் மயிலெனக்கு — அவள்
ஆடலைக் காட்டுகையில்
ஊடும் அவளடியில் — விழ
உள்ளம் இடங்கொடுக்கும்.

விட்டுப் பிரிந்தவர்க்கோ — தென்றல்
வெம்மையைக் கொட்டுவதேன்
தொட்டு மகிழ்பவர்க்கோ — சுவை
தோன்றக் குளிருவதேன்?

மன்மதன் ஏறிவரும் — மந்த
மாருதப் பொற்றேரே!
என்னை வருத்தாதே — எனக்(கு)
இன்னலைத் தாராதே.

*

# ஊனக் காதல்

புத்தம் புதுமலரே — புலவர்
போற்றும் தமிழமுதே
சித்தம் கவர்ந்தவளே — சிறந்த
தேனடை போன்றவளே
முத்துச் சிரிப்பழகி — முதிரா
மோகனப் புன்னகையால்
பித்துப் பிடிக்குதடி — பிரியப்
பேய்மனம் ஒப்புதில்லே.

வாசக் குழலாளே — அசையும்
வஞ்சிக் கொடியாளே
பாசக் கயிற்ருலே — பிணேத்துப்
பாவி எனதுயிரை
நாசம் புரியலாமோ — இது
நாரியர்க் கேற்றதுவோ
பேசப் பயமெதற்கு — பெண்மை
பேசத் தடுக்கிறதோ.

சித்திரத் தேரினிலே — சிறிய
சேத மிருப்பதுபோல்
உத்தமி உன்றனது — காலின்
ஊனம தைநினைத்துப்
புத்தி யிழக்காதே — புதிய
பாதை யமைத்திடுவோம்
சித்த மிசைந்துவிட்டால் — இருவர்
சேரத் தடையெதடி.

என்று கதையளந்தான் — இன்று
என்னை மறந்துவிட்டான்
அன்று மொழிந்ததெல்லாம் — அழியும்
ஆற்றில் எழுத்தாச்சு
நன்று புரிந்தவரை — இந்த
நானில மீதினிலே
கொன்று குவிப்பதுதான் — குறியில்
கோழைகள் கொள்கைகளோ ?

ஊனம் உடம்பிலென்றால் — உறவும்
ஊன மடைந்திடுமோ
ஈனச் செயலலவோ — இதை
ஏன்புரி கின்றனரோ ?
மான முடையவராய்ப் — பெண்கள்
வாழுமிந் நாட்டினிலே
தான மளிப்பதற்கா — கற்பைத்
தாங்கிறார் தையலரே.

# பிஞ்சு வயது

பூத்துக் குலுங்கும் நினைவுகள் — பல
புற்றீசல் போலக் கிளம்பியே
காற்றிற் பறந்து திரிந்திடும் — என்றன்
கற்பனை தன்னைச் சிதைத்திடும்.

நேற்று வரைக்குமென் காதலி — இன்று
நெஞ்சில் நிறைந்த சகோதரி
வேற்று மனித னுடைமையாய் — அவள்
விட்டுப் பிரிந்துமே செல்கிருள்.

பெற்றவர் சாகத் துணிகையில் — அந்தப்
பெண்ணுமோ என்னைத் துறக்கையில்
மற்றவர் பார்த்து நகைக்கையில் — மகிழ்
வெங்கே இருக்குமென் வாழ்க்கையில்.

உள்ளத்தி லாசை விதைகளை — நானும்
ஊன்றி விதைத்ததால் வேதனை
மெள்ளமெள் ளத்தலை நீட்டியே — ஒரு
மெய்யை உணர்த்திடக் கண்டனே.

பிஞ்சு வயதி லரும்பிடும் — காதல்
பின்னு லிடைஞ்சல் கொடுத்திடும்
நஞ்சைக் கயிற்றைக் கிணற்றினை — அது
நாடவும் வைத்தல் புதுமையோ ?

*

# துறையா சேரும்?

மயக்கும் மொழியே மாணிக்க
மணியின் ஒளியே மறுவில்நூல்
பயக்கும் பொருளே பாவாணர்
பண்பின் சுவையே பண்பாளர்
வியக்கும் பெண்மைக் கணியேநல்
விலையில் முத்தே விண்ணோரும்
நயக்குந் தேனே நற்பேறே
நஞ்சேன் விழியிற் சேர்த்தாயோ?

தேவா மிர்தோ செந்தேனோ
திகட்டா வினிய பசும்பாலோ
மூவா மருந்தோ முக்கனியோ
முயங்கும் பொழுதிற் சுவைக்கின்ற
பாவாய் உன்றன் பாகான
பவளச் செவ்வாய் ஊற்றுத்தான்
நாவாற் சொல்ல வியலாதே
நயந்தார்க் கன்றே சுவைதோன்றும்.

முல்லை மொட்டோ வெண்முத்தோ
முறுவல் பூக்கு முன்பறக்கள்
தொல்லை தந்தென் உள்ளத்தைத்
துயரக் கடலிற் சேர்க்கின்ற
இல்லை யென்னு மிடையென்ன
இழையா இன்ப ஊற்றேஊர்ச்
சொல்லைக் கேட்டால் எம்காதல்
துறையா சேரும் சொல்வாயே!

புயலோ கூந்தல் தேன்சிந்து
பூவோ மேனி புனலாடு
கயலோ கண்கள் காமம்செய்
கணையோ கொங்கை காதல்வாழ்
வயலோ வஞ்சி யிடையாடு
வனப்பு வல்லிக் கொடியாளே
அயலோ தூற்று மென்றாலும்
ஆவி காக்க வருவாயே!

*

# இன்னல் களைந்திடு

நீலவா னந்தனி லேஒளி வீசிடும்
நிலவுதான் உன்முகமோ — கெண்டை
குலவும் இருவிழியோ — நாம்
காலமெ லாமுயர் காதல்பு ரிந்திடக்
கண்மணி யேவருவாய் — இன்பம்
பெண்மணி யேதருவாய்.

வஞ்சிக்கொ டியெனத் துஞ்சும் இடைகொண்ட
பஞ்சுபோல் மேனியடி — உன்னைக்
கெஞ்சுவார் கோடியடி — உன்றன்
கொஞ்சும் மொழிகளும் அஞ்சும் விழிகளும்
கொள்ளை யடிக்குதடி — எனது
உள்ளந் துடிக்குதடி.

சங்கை நிகர்த்திடும் மங்கையுன் பற்கள்
தருமொளி முத்தொளியோ — உன்
மறுமொழி எப்படியோ — இரு
கொங்கை மலரிடைத் தொங்கி யசைந்திடும்
கோவை நிரையழகு — பெருக்குது
பாவை யுனதழகு.

காற்றில் அசைந்திடுங் கூந்தல் உனதெழில்
காட்டிட வந்ததுவோ — அழகு
கூட்டிட வந்ததுவோ — தினம்
சேற்றில் மலர்ந்திடுந் தாமரை யின்இதழ்
செய்ய திருவடியோ — எனக்கு
ஐயம் அளிப்பவையோ.

செங்கனி வாய்தரு மின்பம் எனதுயிர்த்
தேன்மொழி யேஅமுதோ — இல்லை
மான்விழி யேமதுவோ — நல்ல
பைந்தமிழ்ப் பாவலர் பாடி யமைத்தநற்
பாட்டின் சுவையதுவோ — கலைஞர்
காட்டுங் கலையமுதோ.

அன்ன நடையொடு மின்னல் இடையுனக்
காரடி தந்ததுதான் — பதில்
கூறடி செந்தமிழ்த்தேன் — உயர்
கன்னல் மொழிபேசி இன்னல் களைந்திடக்
கட்டி அணைத்திடடி — உள்ளம்
விட்டு மகிழ்ந்திடடி.

## காவல்

தங்கச் சிலையென நிற்கிருள் — அவள்
தாவும் மலர்க்கொடி போன்றவள்
பொங்கு மிளமைப் பருவத்தாள் — புவி
போற்று மழகு வடிவத்தாள்
குங்குமச் செவ்விதழ் பூத்திடும் — முத்துக்
கோவை நிரையி னொளியிலே
மங்கை மலர்முகம் மின்னிடும் — பெண்கள்
மாண்பை யெடுத்து விளக்கிடும்.

நூலைப் பழிக்கு மிடையினுள் — தினம்
நோன்பு பிடிக்கு முளத்தினுள்
பாலைப் பழிக்கும்வெள் ளாடையை — வெகு
பக்குவ மாக வுடுத்துமே
காலையும் மாலையுங் கோவிலில் — இரு
கண்களும் நீரைப் பொழியவே
கோல மயிலிவள் ஈசனை — நிதம்
கும்பிடு வாள்உளம் வெம்பியே.

திங்கள் வதன மதனிலே — சேர்
குங்குமப் பொட்டையுங் காணமே
செந்திரு வன்னவள் கூந்தலில் — மலர்
சேர மறுப்பது மென்னவோ
மங்கல நாணே அணிகளோ — இந்த
மாதிற் குகந்தன வில்லையாம்
நந்தமிழ் நாட்டு வழக்கமாம் — பாவம்
நாத னிலாத விதவையாம்.

சின்னஞ் சிறிய வயதிலே — தன்னைச்
சேர்ந்த கணவ னிறந்திடில்
பென்னம் பெரியதோர் கற்பினை — அவள்
பேணி நடந்திட வேண்டுமேல்
அன்னவ ளுக்கொரு வாழ்வினை — நாம்
ஆக்கி யளித்தல் கடமையே
தென்னங் குலைகாவல் இல்லையேல் — அது
திருடப் படாம லிருக்குமா?

*

# பக்தி

அலையெழுந் தார்க்கு மாழ்கடல் நடுவே
யசைந்திடு மோடமீ தமர்ந்து
வலையொடுந் தூண்டில் வகையொடுஞ் செல்லும்
வாழ்வினுக் கேதுணை யான
மலையெனுந் தோளன் தொலைவினிற் சென்று
மறைந்தபின் னும்மனஞ் சோர்ந்து
சிலையெனத் தென்னை யடியினில் நித்தம்
தெய்வமே தொழுதவள் நிற்பாள்.

ஆழ்கடல் நடுவே யனுதினஞ் சென்று
அகப்படு மீன்களைக் கொண்டு
மீள்கண வன்றன் வருகையா லுவகை
மீதெழ வேவர வேற்றுக்
கோலமா மயில்போற் கொஞ்சிடு மொழியில்
கொழுநனோ டன்புரை யாடிச்
சாலவும் மகிழுந் தையலின் கண்கள்
சஞ்சலங் காட்டுவ தேனோ?

மாலையிற் கட்டு மரத்தினிற் செல்லும்
மணாளனை யனுப்பிய வோர்நாள்
சாலவும் வீடு திரும்பினள் பின்னர்
தாக்கிடும் பேய்ப்புயல் மோதக்
காலையிற் சென்று கரையினில் நின்று
காதலன் மீள்திசை தன்னை
வேலினை யொத்த விழிகளும் நைய
வேதனை யோடெதிர் பார்த்தாள்.

நாட்களுஞ் சென்று நகர்ந்தன ஆனால்
நாயகன் மீண்டிட வில்லை
ஆட்களுந் தேடி யலைந்தனர் அந்த
அழகனைக் கண்டிட வில்லை
வாட்டமே யுருவ மாகிய மாதும்
வாழ்வினி லேவெறுப் புற்று
நாட்டமுந் தேய நங்கையும் வாடி
நலிந்திடு நாளையில் ஓர்நாள்—

நல்லவோர் செய்தி நங்கையும் பெற்றாள்
நாயகன் வந்துமே சேர்ந்தான்
பல்பெருந் துன்பம் பாவையும் பெற்ற
படியினா லேயவன் மீண்டும்
செல்வதைக் காணில் திசையினை நோக்கித்
தெய்வமே போற்றியும் நிற்பாள்
தொல்லைகள் வந்து சேர்ந்தபின் பக்தி
தோன்றுதல் மானிடர்க் குண்டே!

# நிலையாமை

மேற்குத் திசையிலே செங்கதிரோன் — இதோ
மெல்லெனக் கீழே யிறங்குகிறன்
தோற்கும் அவன்நிலை பாருங்கடி — இருள்
சூழும் விரைவினைக் காணுங்கடி.

காலை யிருந்தவன் ஆதிக்கத்தைத் — தினம்
காட்டுகி றன்எமை வாட்டுகிறன்
மாலையி லேமலை மீதினிலே — ஒளி
மாட்டுகி றன்பரி யோட்டுகிறன்.

பூத்த நிலவின் சிரிப்பதனல் — இந்தப்
பூமி பொலியுது பொன்னெளியால்
நீத்த அழகினைப் பாருங்கடி — நிலா
நீள்கதி ரோன்வரும் வேளையிலே.

தாமரை போன்ற முகவழகும் — ஒரு
தங்கம் நிகர்த்த உடலழகும்
காமனை வென்றிடு கட்டழகும் — இந்தக்
காசினி மீது நிலைப்பதில்லை.

பூமலரும் அதி காலையிலே — அதன்
பொன்னொளி மாறிடும் மாலையிலே
காமலருஞ் செடி வாழ்க்கையடி — இந்தக்
காசினி வாழ்வொரு மாயமடி.

ஆதிக்கஞ் செய்திடு மின்றையவர் — தினம்
ஆதிக்கஞ் செய்திடப் போவதில்லை
வீதிக்கு மப்பாலே நின்றவரும் — வந்து
வீற்றிருப்பர் அந்த ஆசனத்தே.

இந்த உலகில் இருப்பவர்கள் — இங்கு
என்று மிருப்பவ ரில்லையடி
வந்த வழியினிற் சென்றிடுவர் — முன்பு
வந்து மறைந்தவர் போலவடி.

காலமெ னுந்தேர்வி ரையுதடி — அதன்
காலடி மட்டுந் தெரியுதடி
ஞாலமிதை யெண்ண வில்லையடி — இந்த
மாய வுலகினை நம்புதடி.

## கவிதைப் பெண்

கவிதைப் பெண்ணுள் கன்னியடா
காலங் கடந்த தெய்வமடா
புவியிற் புலவர் கண்களடா
புதுமை விரும்பும் பூவையடா!

கற்பனை யென்னுந் தேரேறிக்
கவிஞர் நாவில் நடமாடிப்
பற்பல உருவம் பெறுகின்ற
பாவை பாட்டிற் கரசியடா!

உள்ளத் துதிக்கும் எண்ணத்தை
உணர்ச்சிப் பெருக்கின் தோற்றத்தை
விள்ளற் கரிய சுவைசேர்த்தே
விருந்தாய் அளிக்குந் தெய்வமடா!

பூவுங் கவியாய் மாறுமடா
புயலும் பாட்டாய் ஆகுமடா
யாவுங் கவிதை மயமாகும்
யார்க்குஞ் சிறந்த சுவையாகும்!

புன்மை களையுங் கவிதைமகள்
புகழை அளிக்கும் புதியமகள்
நன்மை புரியும் ஞானமகள்
ஞாலம் போற்றுந் தெய்வமகள்!

தெவிட்டா இனிய தேனுவாள்
சிந்தைக் கரிய விருந்தாவாள்
உவட்டா அமுதச் சுவையாவாள்
உயர்ந்த பொருள்சேர் நிதியாவாள்!

வாழும் நெறிகள் கூறிடுவாள்
வஞ்சங் கண்டு சீறிடுவாள்
நாளும் புதிதாய் மாறிடுவாள்
ஞாலச் சுவையை மீறிடுவாள்!

எங்கும் உறையுங் கவிதைப்பெண்
இதயத் திருக்கும் புதுமைப்பெண்
பொங்கும் புதிய எழிலோடு
புதிதாய் நித்தம் வருவாளே!

# பெருமரமாக்கி வைப்பாய்!

கொடும்வெயில் நேரம் கையிற்
கோடரி கொண்டு காட்டின்
நெடுமர மொன்றி லேறி
நீள்கிளை வெட்டு மன்னேன்
கடும்பசி கொண்டி றங்கிக்
களேப்பினைப் போக்க வெண்ணி
விடும்பெரு மூச்சோ டந்த
விருட்சத்தின் கீழ மர்ந்தான்.

தன்னருங் கிளேயை வெட்டித்
தனக்கிடர் செய்தோ னென்ற
எண்ணமே யின்றி நீழல்
ஈந்தவம் மரத்தி னேடு
புண்ணியம் பாவம் பேசிப்
புன்மையே செய்யு மிந்த
மண்ணுளோர் ஈடா வாரோ
மற்ருெரு மரமே யாகும்.

எங்குமே நிறைந்த எல்லை
யில்லதோ ரீசா இங்கு
பங்கமே செய்து பாவப்
பயிரினை வளர்க்கு மென்னை
இங்கித மாக வாழ
வைத்திடு இல்லா விட்டால்
பொங்கிடு கருணை யுள்ள
பெருமர மாக்கி வைப்பாய்!

*

# பழையன கழிதல்

நீட்டிய காலை நிலத்திற் படியப்
போட்ட படியே பாட்டி யிருந்து
பல்லில் வாயாற் பக்குவ மாக
மெல்லத் தக்க வெற்றிலை பாக்கை
உரலிற் போட்டு ஒழுங்கா யிடித்து
விரலாற் தோண்டி வெளியே எடுத்துப்
பொக்கு வாயிற் புகுத்திய வண்ணம்
அக்கம் பக்க மிருப்போர் கேட்க
அடுக்கும் கதைகள் ஆயிரம் ஆயிரம்
விடுப்புக் கேட்கும் வேலையில் லாத
கூட்ட மொன்று பாட்டிக் குண்டு.

பாட்டியின் பேர்த்தி பார்வதி யுடைய
திருமண வெழுத்துச் சீராய் முடிய
மறுநாள் மாப்பிள்ளை சினிமாப் பார்க்கப்
பெண்ணை யழைக்கப் பெற்றோர் இசையக்
கண்ட பாட்டி கடிந்தும் கேட்டிலர்.

அன்றைய கதைக்கோர் அருமை யான
கருப்பொருள் கிழவி கையிற் கிடைத்தது
கொள்ளி செருகுவோர் கூடி யிருக்க
அள்ளி யிறைக்கிறுள் அழகுப் பாட்டி.

அந்த நாளில் அழகா யிருந்த
எந்தப் பெண்ணு மெனக்கீ டில்லே
அப்புவு மாச்சியும் அவருக் கென்னே
எப்பவோ முடிவு செய்தன ரெனினும்
ஒருநா ளாவது ஒருமுறை யேனும்
திருமண முன்பு இருவரு மாகப்
பேசிய தில்லே பெரியோ ரெண்ணப்
படியே நடந்தோம் பலதும் பெற்ருேம்
ஒருநாள் நடந்தது உண்மைக் கதையிது.

தண்ணீர் அள்ளத் தன்னந் தனியாய்க்
குடமும் பட்டையும் கொண்டு வயலில்
நடந்து சென்றேன் நான்செலும் வழியால்
அவரும் வந்தார் அவதா னித்தார்
அடுத்த நிமிடம் அடிதான் கண்டேன்
அவரைக் காணேன் ஆனுல் இன்ருே...

என்று தொடங்க நின்ற வொருத்தி
நன்னூல் கற்ற நங்கை போலும்
பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி ஞனே
என்றனள் கிழவி ஏதடி நீதான்
வளவள வென்கிருய் என்றிட நின்ருேர்
கேலிச் சிரிப்பொடு கிளம்பினர் வீடே.

## காலம் என்னுங் காட்டாறு

மரண தேவன் வருகின்ருன்
மனிதா மமதை கொள்ளாதே
சரணஞ் சரணம் என்ருலும்
தயவோ சற்றுங் காட்டானே.

நாளை நடக்குஞ் சம்பவங்கள்
நமக்கோ ஒன்றுந் தெரியாது
பாழும் உலகில் வீணுகப்
பாவப் பயிரை வளர்க்காதே.

கால மென்னுங் காட்டாறு
கணமும் நில்லா தோடிறது
ஞால மிசையாம் வாழ்கின்ற
நாட்கள் இதிலோர் துளியாகும்.

காலை உதிக்கும் ஆதவனும்
கட்டவிழ் கின்ற மலர்யாவும்
மாலை மடியக் காண்கின்றோம்
மறுநாட் புதுமை புதுமையடா.

பொன்னும் பொருளும் வீணாகும்
போகும் உன்பின் வாராது
என்று மிருப்ப தொன்றுண்டு
இதுவே ஈட்டும் புகழாகும்.

தூய நெறியிற் புகழீட்டு
துன்பஞ் செய்து வாழாதே
காயம் வாழ்ந்தாற் போதாது
கடமையு முண்டு மறவாதே.

தேயம் வாழப் பாடுபடு
சிறந்த புகழை நிலைநாட்டு
தீய யாவும் நீக்கிவிடு
செகத்தில் நீயே சிரஞ்சீவி.

# பேராசைக் கனல்

ஆசைக் கடலில் அகப்பட்டுக் கொண்டேன்
ஐயகோ மீழ வழியறி கில்லேன்
காசைக் கடவுளாய் எண்ணுகின் றேனே
காரணம் காசின்றிக் காரிய மேது?

இல்லாத ஏழையை இந்தப் புவியில்
ஏனென்று கேட்பவர் யாருமே யில்லை
செல்லாச் சரக்காய் அவனிருக் கின்றான்
சீசீ இதுதானும் மானிட வாழ்க்கை.

கல்லாத மூடன் கனவானு கின்றான்
கற்றவன் கைகட்டி வாய்புதைக் கின்றான்
நல்லா யிருக்குது ஞாலத்து நீதி
நாளை நடப்பதை யார்சிந்திக் கின்றார்.

பொல்லாத தீயரும் பூமியின் மீது
புண்ணிய வான்களெ னப்படு கின்ருர்
நல்லாக யோசித்துப் பாரென்றன் நண்பா !
நானில மீதிலே காசுதான் தெய்வம்.

நன்மை புரிந்திடும் எண்ணமுள் ளாரும்
நாலு பணத்திற் கதிபதி யாஞற்
சொன்னசொல் மாறிச் செயல்புரி கின்ருர்
துட்டரை யாமெண்ணிப் பார்த்திட லாமோ ?

பொன்னும் பொருளும் இருப்பவ ருக்கே
புத்தி யிருக்குதாம் பூமியின் தீர்ப்பு !
என்ன படித்தாலும் எங்களுக் கென்ன ?
இந்த வுலகத்திற் காசுதான் தேவை.

ஆகவே காசுதான் தெய்வமென் கின்றேன்
அர்ச்சனை செய்து வழிபடு கின்றேன்
மோகம் தணிந்திடாக் காமுகன் போலே
மூண்டபே ராசைக் கனலில்வீழ்ந் திட்டேன்.

*

# அன்னை

காலையில் நீராட்டிப் பொட்டுமிட்டு — இரு
கன்னத்திலும் அன்பு முத்தமிட்டு
கோல வழகுசெய் தூட்டியபின் — கல்விக்
கூடத்திற் கென்னை அனுப்பிவைப்பாள்.

பள்ளிக்குப் புத்தகப் பையுடனே — யானும்
பக்கத்து வீட்டுச் சிறுவருடன்
துள்ளிக் குதித்து நடந்துசெல்வேன் — அம்மா
சொக்கித் திளைத்தெனைப் பார்த்திருப்பாள்.

பாதம் சுடும்வெயில் வேளையிலே — கற்ற
பள்ளியால் ஓடி வரும்பொழுது
காத தூரமெனைத் தேடிவந்தே — கையாற்
கட்டிய ணைத்தவள் தூக்கிடுவாள்.

செய்திடுந் துட்டத் தனத்தையெல்லாம்—அன்னை
சீராக மூடி மறைத்துவைத்தே
உய்நெறி யாதெனக் கூறிடுவாள் — என்னை
ஒப்பில் மனிதனுய் ஆக்குதற்கே.

என்றனின் கண்கள் கலங்கையிலே — அன்னை
எரியிற் புழுவாய்த் துடித்திடுவாள்
கொன்றிடும் வேதனை யும்பொறுப்பாள்—சொந்தக்
குழந்தை உயிரினைக் காப்பதற்கே.

தந்தை சினங்கொள்ளும் வேளையிலே — என்னைச்
சார்ந்து சமாதானஞ் சொல்லிடுவாள்
மைந்தன் எனக்காக வாழுகிற — என்றன்
மாதாவைப் போற்றெய்வ மெங்குமில்லை.

*

# மழலைச் செல்வம்

அழகைப் பிழிந்து பிரமன் படைத்த
அமுதம் நிறைந்த கலசம்
மழலை பொழிந்து மனதைக் கவர்ந்து
மகிழும் மலர்ந்த வுருவம்.

தவழ்கின்ற கைகள் இருகால்கள் கண்டு
தடுமாறு மெங்கள் உளமே
அவிழ்கின்ற கோவை யிதழ்சிந்து வார்த்தை
அமரர்க்குள் உய்த்து விடுமே.

மாசில்லா நெஞ்சம் மறுவில்லாச் சிந்தை
மண்மீதில் யார்க்கு மிலையே
ஆசில்லா நெஞ்சத் தழகான சேயோ
அழியாத இன்ப நிலையே.

கண்ணாலே கண்டு களித்தாலும் போதும்
கற்கண்டை உண்ட சுவையே
மண்மீது சின்னத் தளிர்மேனி ஈயும்
மகிழ்ச்சிக்கு எல்லை யில்லையே.

பண்ணோடு கீதம் பாகோடு தேனும்
பாலோடு நல்ல பழமும்
உண்போர்க்கு மில்லா உயர்வான இன்பம்
ஒருசின்ன மழலை தருமே.

கோடான கோடி நிதியொன்று சேர்ந்து
குழந்தைக்கு முன்னர் வருமோ
ஈடாகச் சொல்ல இங்கொன்று மில்லை
இணையற்ற செல்வ மிதுவே.

*

# சம்பள வாழ்வு

இந்தமாதச் சம்பளம்யான் பெறவே யில்லை
ஏனென்று கேட்காதீர் செய்த பாவம்
அந்தவொரு காரணத்தால் அடியேன் உள்ளம்
அனுபவிக்குந் துன்பங்கள் கொஞ்ச மன்று
சந்தையிலே காய்கறியை வாங்கி வந்து
சரிபாதி கூட்டிவிற்குங் கடைக்கா ரர்க்கும்
வந்துவந்து காலையிலே அப்பம் நல்கும்
வாழ்விழந்த கிழவிக்கும் வகையென் சொல்வேன்.

அரிசிக்கும் பருப்பிற்கும் யார்வந் தாலும்
அன்போடு கொடுக்கின்ற தேநீ ருக்கும்
எரிகின்ற விறகுக்கும் எண்ணெய் தண்ணீர்
இவற்றோடு (இ)டாம்பீகப் பொருளுக் கெல்லாம்
சரியாக ஒருமாதத் தவணை சொல்லிச்
சம்பளத்தை நம்பிநான் வாங்கி வந்தேன்
எரிகின்ற தென்நெஞ்சம் இந்த மாதம்
எவ்வாறு சமாளிக்கப் போறே னப்பா.

பக்கத்து வீட்டிலொரு பாவை நல்லாள்
பட்டுடுக் கின்ருளாம் ; பலநா ளாகத்
துக்கத்தோ டென்துணைவி கூற யானும்
தூயவளை மகிழ்விக்க எண்ணி யோர்நாள்
மிக்கபணி வோடெனது அயலா னிட்டே
வாங்கியரு பாய்தன்னை இந்த மாதம்
வைக்கவில்லை யென்றிட்டால் மானம் போமே
வருங்காலத் திற்கடன்யார் தருவ ரந்தோ.

கந்தோரி லேயுள்ள 'கன்ரீ' னுக்கும்
காரியால யஞ்செல்லும் பஸ்கா சிற்கும்
அந்தவிழா இந்தவிழா என்று கேட்க
அரைமனதோ டேயுதவும் நிதிக்கும் வீடு
வந்தவுடன் அப்பாவென் ருேடி வந்தே
வாங்கிவந்த பொருளென்ன என்றே ஆயும்
சொந்தமத லைக்கனிக்குச் சுவைக்கும் நல்ல
தேன்கனிகள் வாங்குதற்கும் என்ன செய்வேன்.

மரியாதை யோடுசுய மானத் தோடு
மண்மீதி லேவாழ வேண்டு மானல்
சிறிதாக இருந்தாலும் சுயமாய்ச் செய்யும்
தொழிலேது மறிந்துநா மிருக்க வேண்டும்
பெரிதான உத்தியோக மென்ற போதும்
பிறரிட்ட பிச்சையேல் பெருமை யுண்டோ
வரும்மாதச் சம்பளத்தை நம்பி வாழும்
வாழ்க்கையுமிவ் வுலகிலோர் வாழ்க்கை யாமோ?

## தூரகர்

எட்டு முழத்தை இரண்டாய் மடித்துக்
கட்டிக் கொண்டு கட்டைக்கை யுள்ள
சட்டை யணிந்து சால்வையால் தலையில்
தலைப்பா வைப்பார் சந்தனத் தாலே
நெற்றியிற் பொட்டும் நிறைய வாயில்
வெற்றிலை போட்டதால் விடாத காவியும்
காலிற் செருப்புங் கமக்கட் டுள்ளே
தைய லாயிரந் தாங்கிய குடையுமாய்
அழகாய்த் தோன்று மவரின் மடியோ
வெற்றிலை பாக்கு வெறிக்கும் புகையிலை
மற்றும் பொருள்களும் மறைத்துக் கட்டிய
கடதாசிச் சரையாற் கனத்தே யிருக்கும்
இதனால் ஊதிய இவரது மடியை
மூடிய சட்டை முன்னே தள்ள
ஆறேழு மாத மாகி விட்ட
கர்ப்பிணி போலக் காட்சி யளிப்பார்
ஒய்வொழி வின்றி யொவ்வொரு நாளும்

வாலிபர் வீடு வனிதையர் வீடாய்
ஏறி யிறங்கும் இவர்தான் சோற்றில்
முழுப்பூ சினியை மூடி மறைக்கும்
தந்திரம் கற்ற தரகர் தம்பர்.

தம்ப ரர்லே சம்பந்தி யாகி
வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டோர்
படுகிற பாடோ பார்படாப் பாடு
தடியடி யுடனே சமாதான மானோர்
கோட்டிலே யேறிக் குணத்தை யிழந்தோர்
விட்டுப் பிரிந்தவர் விடாது மெலிபவர்
கட்டி யழுபவர் கடவுளே யென்பவர்
இப்படி யாக இந்தப்பெரு மானின்
செப்படி வித்தையாற் சீரழி வோர்பலர்
என்றாலும் என்ன இன்றைக்குந் தம்பர்
நன்றாகத் தொழிலை நடாத்து கின்றார்.

கடவா யாலே வெற்றிலைச் சாறு
வடிய வடிய வடிவாய்த் தம்பர்
இளைஞரை வளைக்கும் புதுமையே புதுமை.

அவளைப் போல அழகான பெண்ணோ
அவரின் பொருள்போல் அத்தனை சொத்தோ
எங்கே யுண்டு எனக்குச் சொல்லு
என்று புளுக எடுபடும் வாலிபர்

சென்று பெண்ணைப் பார்ப்பதும் சிந்தையை
விட்டுச் சீதனம் எழுது முன்பே
தொட்டுப் பொறியில் மாட்டிக் கொள்வதும்
தம்பர் சரித்திரந் தருகிற உண்மை.

இல்லாத வற்றை இரண்டு பக்கமும்
நல்லாகச் சொல்லி நடத்த வேண்டிய
திருமண மதனைச் செய்து பெற்ற
தரகுப் பணத்துடன் தம்பர் போனல்
பிறகு காண்பது பெரிய பாடு
ஆயிரந் திருமணம் அடுக்கடுக் காகச்
செய்து வைத்த சிறந்த தம்பரின்
மூத்த மகளோ முப்ப தாகியும்
காத்தே யிருக்கிருள் கல்யாண நாளை
தம்பர் வீட்டிற்குத் தரகர் ஒருவர்
நம்பி யின்னும் வரவில்லை யாமே.

*

# உதைபந்தாட்டம்

உதைபந்தாட் டப்போட்டி யொன்றி லோர்நாள்
உற்சாக மாகவே யாடும் வண்ணம்
இதமாக வாசிரிய கழகத் தார்கள்
எனைக்கேட்க இடியுண்டோ ளுகி யானும்
எதைவேண்டு மானுலுஞ் செய்வேன் ஆனுல்
இதைமட்டுங் கேளாதீ ரென்ன இந்தக்
கதைவேண்டாம் கட்டாயம் பங்கு பற்றிக்
கழகத்தின் பெயர்காக்க வேண்டு மென்ருர் !

கண்ணுலே பந்தினையான் கண்ட தன்றிக்
காலாலே தொட்டறியேன் இதனை ஏனே
எண்ணுமல் ஈடுபட வைத்தே மிக்க
ஏளனத்திற் குள்ளாக்கப் பார்க்கின் றீர்கள்
மண்மீது பாய்கின்ற சிறுத்தை போன்ற
மாணவர்க ளோடுயாம் போட்டி போட்டுப்
புண்ணியமே இல்லைமிகப் புத்தி யோடு
போட்டியைக்கை விட்டிடுவோம் என்று சொன்னேன்.

ஆண்டுதொறும் தவருது நிகழு மிந்த
ஆட்டத்தை ஆவலுடன் எதிர்பார்க் கின்ற
ஈண்டுள்ள (இ)ரசிகர்களை ஏமாற் ருதே
இயலாத தொன்றில்லை யென்ருேர் வாறு
நாண்டுகொண்டு சம்மதிக்க வைக்க அந்த
நாள்யானும் விளையாடிப் பட்ட பாட்டை
ஆண்டவனே என்சொல்வேன் ஐயோ! பெற்ற
அனுபவத்தை யறைகின்றேன் அன்பாய்க் கேளீர்.

ஓடிவந்த பந்தினையான் உதைக்க வென்றே
ஒருகாலைத் தூக்கஅது மறுகால் மோதிக்
கூடியுள்ளோர் கைகொட்டிச் சிரிக்க என்னைக்
குப்புறவே வீழ்த்தியது பின்ன ராங்கே
ஆடுகின்ற வீரர்களைப் பார்த்துப் பந்தை
அடிப்போமே என்றெண்ணும் வேளை தோறும்
நாடியிலும் நெஞ்சினிலும் முகத்தி லெல்லாம்
நன்ருக மோதிநகைக் காளாக் கிற்றே!

அப்பாடா வென்றுமே சுற்றிப் பார்த்து
அவமானந் தாங்காமல் நிற்கும் போது
தப்பாமல் என்றனது தலையை நோக்கிச்
சரியாக வந்திட்ட பந்தை இந்தா!
இப்போதே யடிக்கின்றேன் தலையா லென்றே
எதிராக ஓடினேன் ஏனோ பந்து
தப்பியது என்முன்னே நின்ருே ருலே
சாய்ந்திட்டேன் மூக்கிலடி பட்ட தாலே.



தே - 7

இப்படியான் பட்டதுயர் அவமா னங்கள்
எண்ணிறந்த ஆயினுமிங் கிதனுற் பெற்ற
செப்பரிய உண்மைகளோ பலவாம் ஒன்றைச்
செய்யவலி யற்ருேருஞ் செய்கின் ருேர்மேல்
தப்பாயி ரங்காணத் தயங்க மாட்டார்
தாம்கூடத் தவறலா மென்ற எண்ணம்
எப்போதும் மானிடனுக் கில்லை இந்த
எரிச்சலையெங் கேகொட்டித் தீர்ப்பே னப்பா.

*

# ஈழமிதுவே

தேனாறு பாயுஞ் செழிப்பான ஈழம்
செகமீதி லின்ப லோகம்
வானுடர் போற்றும் வளம்பொங்கு நாடு
வனப்புள்ள சொர்க்க லோகம்.

நானூறு தேச நலங்கண்ட பேரும்
நயந்தேற்று மினிய நாடு
தேனூறுஞ் சோலை தெவிட்டாத கனிகள்
தித்திக்குந் தெய்வ நாடு.

அழகான மஞ்ஞை நடமாடும் பூவை
அதனோடு கிளிகள் பேசும்
பொழில்மேவும் பூக்கள் சதிராடும்; பெண்கள்
புனலாடக் குயில்கள் பாடும்.

மான்துள்ளிப் பாயும் மரைதாவும் மந்தி
மரமீதி லூஞ்ச லாடும்
தேன்உண்ணும் வண்டு சிங்கார நாதம்
சிவலோக மென்ன ஆர்க்கும்.

வெந்நீரு மூறும் தண்ணீரும் ஊறும்
விலையில்லா முத்து விளையும்
பன்னீரில் தோயும் பனிதங்கு மலைகள்
பணத்தோட்ட மாக மிளிரும்.

சிவபோதம் புத்த மதபோதம் யேசு
தருபோதம் நபிகள் போதம்
நவஈழ மக்கள் நலிவின்றி வாழ
நலஞ்செய்து நிற்கு மினிதே!

'மதபேத மில்லை மதுபான மில்லை
மலைபோன்ற சிக்கல் இலையே
புதிதான ஈழ மிதுவே'யென் றோதும்
பொன்னாளு முருவாகு தே.

*

# தேனாறு

மண்சோறு காய்ச்சி மகிழ்வதைப்பார் — என்றன்
மாதுளம் பிஞ்சின் மதலையைப்பார்
உண்ண அழைக்கும் அழகினைப்பார் — அதை
ஊட்ட விழைந்திடும் ஆசையைப்பார்!

புழுதி அளைந்தபின் ஓடிவந்தே — என்றன்
புத்தாடை பற்றி இழுப்பதைப்பார்
கழுவக் கரைச்சல் கொடுப்பதைப்பார் — ஒரு
கம்பெடுத் தென்னை அடிப்பதைப்பார்!

உண்ணும் உணவினை அள்ளுவதும் — அதை
ஒவ்வோ ரிடத்திலே சிந்துவதும்
தண்ணீரை ஊற்றி மகிழ்ந்திடலும் — அதிற்
தானே விழுந்தெழுந் தோடுவதும்.—

பானையைத் தூக்கி உடைப்பதுவும் — அதன்
பக்கத்தில் நின்று சிரிப்பதுவும்
பூனையின் வாலை இழுப்பதுவும் — ஒரு
புத்தகந் தன்னைக் கிழிப்பதுவும்.—

நல்லகதை சொல்லக் கேட்பதுவும் — அதை
நன்ருய் (இ)ரசித்துச் சுவைப்பதுவும்
கொல்லென்று சேர்ந்து சிரிப்பதுவும் — எம்மைக்
கொல்லுது கொல்லுது கொல்லுதடா!

என்னவோ என்னவோ பேசுதடா — அதில்
எத்தனை எத்தனை இன்பமடா
சொன்னதைச் சொன்னதைச் சொல்லுதடா — அவை
சொர்க்கத்திற் கெம்மையே தள்ளுதடா!

வள்ளுவன் தந்த குறளைஉண்டேன் — கம்பன்
வார்த்த கவிதை அமுதைஉண்டேன்
தெள்ளு தமிழ்ச்சுவைப் பாக்களுண்டேன் —இவை
சேயின் குறும்புக்கீ டில்லையடா!

வையகத் தின்ப மனைத்தினையும் — ஒரு
வண்ணக் குழந்தை கொடுக்குமடா
மெய்யாக விந்தக் குறும்புகளால் — என்றன்
மேனியில் தேனூறு பாயுதடா!

# சிற்பியின் காதல்

செந்த ணற்பிழம் பாக இதுவரை
சீற்ற மோடர சாண்ட பகலவன்
வந்த னந்தரை மாதுக் குரைத்தொளி
மாய வேகடல் மூழ்கி மறைந்தனன்.

அந்த வேளையில் ஆயிரம் பட்சிகள்
அங்கு மிங்கும் பறந்துண வுண்டபின்
சொந்த மானதம் குஞ்சுகட் கூட்டிடத்
தூய நல்லிரை யோடு திரும்பின.

இன்னி சைபல பட்சிகள் பாடின
ஏழை ஆயரின் வேய்ங்குழல் கேட்டன
கன்ன லொத்தவ ரோடிளம் வாலிபர்
காளை யோட்டிய வாறுவீ டேகினர்.

ஈசன் கோயில் மணிகள் ஒலித்தன
யாங்க ணுந்துதிப் பாடல் எழுந்தன
வாசந் தேரும் அளிகள் இசைத்தன
வைய மாதிர வாடை யணிந்தனள்.

மந்த மாருதம் மெல்லத் தவழ்ந்தது
மல்லிகை மணம் அள்ளிக் கொணர்ந்தது
சுந்த ரத்தமிழ் பாடும் அழகிய
தோகை மார்விளக் கேற்றி மகிழ்ந்தனர்.

பால்சு ரந்திட ஊட்டும் பசுக்களின்
பாயுங் கன்று களும்பசி தீர்ந்தபின்
வால்கி ளப்பியாங் கோடி மகிழ்ந்தன
வான மீதில் மதியு மெழுந்தது.

பால்சொ ரிந்தபி டேகம் புரிந்திடு
பான்மை போல்நிலாத் தண்ணொளி வீசியே
ஞால மெங்கணும் காட்சி யளித்தது
நாலு திக்குமோர் புன்னகை பூத்தது.

ஊறும் துன்பங்கள் ஆயிரந் தாக்கிட
ஒப்பி லாச்சிலை யானவோர் கன்னிகை
கூறு மேனகை ரம்பையோ வென்றிடக்
கொஞ்சும் பாதச் சதங்கையோ டேகுவாள்.

### வேறு

பொற்சிலை போலும் வடிவினள் — ஒரு
பூங்கொடி யென்னும் இடையினள்
கற்புக் கணிகல மானவள் — அந்தக்
காமனை வெல்லு மழகினள்.

பூத்துக் குலுங்கும் மலரிவள் — தமிழ்ப்
புத்தகம் போலச் சிறந்தவள்
நேத்திரங் கட்கணி யானவள் — எவர்
நெஞ்சையும் வெல்லுங் குணத்தினள்.

ஆடற் கலையிலே வல்லவள் — நட
மாடு வதேதொழி லானவள்
நாடறி யுங்கலை மாதிவள் — பலர்
நாவிலும் நெஞ்சிலும் உள்ளவள்.

ஓவியர் தீட்டிய சித்திரம் — உயிர்
ஊட்ட வெழுந்தசை கின்றபோல்
காவி நிகர்த்த விழியினுள் — ஒரு
கற்பகச் சோலையை நண்ணினுள்.

சோலையி லேஒரு மூலையில் — நல்ல
சுந்தர வாலிபன் நின்றனன்
காலை யசைத்தொலி செய்தனள் — அவை
காதில் விழஅவன் நோக்கினன்.

### வேறு

சலசலக்கு மோடையொலி யன்றி வேறு
சத்தமெதுங் கேளாத அந்த நேரம்
நிலவொளியின் கதிர்பட்டுத் தெறிக்கும் மேனி
நெய்குழலாள் தனைநோக்கி யவனு ரைப்பான்.

கண்ணேயுன் வரவெண்ணிக் காத்தி ருந்து
கனற்பட்ட புழுவாகத் துடிக்கு மென்னைப்
புண்ணுக்கு மோவன்றிப் புதுநீ ராட்டிப்
புத்துணர்வை யூட்டிடுமோ வுன்சொல் என்றான்.

அழகான சிற்பமெலாம் வடித்துக் காட்டி
அதன்மீது காதல்கொளச் செய்யு மென்னைப்
பழிவாங்க எண்ணியோ பிரம தேவன்
படைத்துன்னை என்னிடத்தே யனுப்பி வைத்தான்.

எங்கேயோ குடிலொன்றிற் பிறந்த என்னை
ஈடில்லாச் சிற்பியெனப் பலரும் போற்ற
இங்கிதமாய் இந்நாட்டு மன்னன் ஓர்நாள்
இட்டுவந்தே சிற்பங்கள் படைக்க வைத்தான்.

அழகான மாளிகையில் வாழ வைத்தான்
அரியபொருள் ஈந்தான்நல் வாழ்வு தந்தான்
எழில்மேவுஞ் சிற்பங்கள் ஆக்க வாக்க
என்றனைப்பா ராட்டுவதில் உளங்க ளித்தான்.

அன்ருெருநாள் மேடையிலே அரசன் முன்னே
ஆடியபோ துன்னழகில் ஈடு பட்டே
என்மனதை யர்ப்பணித்தேன் எண்ணி யெண்ணி
இரவுபக லாய்உனேயே கனவு கண்டேன்.

நீயில்லா வாழ்வுமொரு வாழ்வோ என்று
நெஞ்சமெலாம் புண்ணுகி வருந்தும் போது
தூயவளே உன்காத லுளத்தை யீந்தென்
சோர்வெலாம் போக்கிமனம் மகிழ வைத்தாய்.

இவ்வுலகில் என்றனைப்போல் அதிஷ்ட சாலி
யாருமில்லை என்றபெரும் இறுமாப் போடு
திவ்வியமே நானிருந்தேன் ஆனுல் இன்றே
தேர்வேந்தன் எமைப்பிரிக்க முயல்கின் ருனே!

பட்சிகளும் விலங்குகளும் பயமே யின்றிப்
பார்மீது காதல்புரி கின்ற போது
வெட்கமின்றி மானிடரேன் காத லுக்கு
விலங்கிட்டு வேதனையை விளைக்கின் ருரோ?

அரசசபை நர்த்தகிநீ யென்ப தற்காய்
அவன்எண்ணப் படிகாதல் செய்வ தாமோ
உரிமையிதை யெவ்வாறு பெற்ருன் உன்றன்
உறவினனு அல்லாது அடிமை யாநீ.

வேதனையோ டவன்கேட்க விம்மி விம்மி
வெம்பியுளம் நைந்துருகி விழிநீர் சோரக்
காதலரே இன்றரசன் தன்னைக் கண்டு
கதறியழு தேன்இரந்தேன் கருணை கேட்டேன்.

நீதவறு செய்யவில்லை யென்ற போதும்
நிருத்தமிடும் பெண்ணரசே கலையைக் காக்க
காதலொரு தடையாகும் ஆத லாலே
கைவிடுவாய் சிற்பியையென் றுரைத்தான் மன்னன்.

கலைக்காக வாழ்கின்றோர் காத லித்தல்
கண்டிக்கத் தக்கதென வுரைக்கு முன்றன்
கொலைக்கொப்பாம் வார்த்தையிலும் பார்க்க என்னைக்
கொன்றிடுவாய் என்றுரைத்துக் குமுறி நின்றேன்.

கல்லுருகும் என்னழுகை யரவங் கேட்டால்
கருணையற்ற மரமாக மன்னன் நின்றான்
கொல்லுகின்ற கொடுமையிது மன்னா என்றேன்
கொல்லாதே கலைவாழ்வை என்று சொன்னான்.

கல்லினிலே கலைபெய்து கவிஞர் சிற்பம்
காட்டுமெழிற் காளையவன் கூடக் காதற்
தொல்லையினால் கைவண்ணம் மறந்து போவான்
தூயவளே கலைமாய ஆளா காதே.—

ஆகையினுல் ஆரணங்கே அவலம் வேண்டாம்
அவனைமற அரசசபைக் கழகை யூட்டு
மோகமொரு முப்பதுநாள் என்றே சொல்லி
முடிமன்னன் செல்லமுயல் கின்ற போது.—

தெய்வத்தின் மேலாகக் கலையைப் போற்றுஞ்
சிறியவள்நான் என்ருலுங் காத லித்த
தெய்வத்தை மறப்பதிலும் பார்க்க இந்தச்
செகவாழ்வை விட்டிடுவேன் உறுதி என்றேன்.

அப்போது வேந்தனவன் என்னைப் பார்த்து
அடிசிறுக்கி உன்றனது முடிவி தென்ருல்
இப்போதே சிற்பியவன் தலையைக் கொய்வேன்
இதன்பின்னர் நீயென்ன செய்வா யென்ருன்.

என்னருமைக் காதலரைக் கொன்ற பின்னர்
யான்உயிரைத் தாங்குவனே மன்ன என்னச்
சின்னவளே அவன்வாழ வேண்டு மானல்
தியாகஞ்செய் காதலையென் றவன்சென் றிட்டான்.

வேறு

வானக மோடி இருண்டது — குளிர்
வாடையும் மெல்ல அருண்டது
ஈனக் குரலிற் பறவைகள் — சில
இங்கொன்று அங்கொன்ருய்க் கத்தின.

கல்லெனச் சிற்பி யிருந்தனன் — அந்தக்
காரிகை விம்மி வெடித்தனள்
வெல்லுங் கலைகளில் வல்லவர் — மிக
வேதனை யுற்று வருந்தினர்.

அப்பொழு தாங்கவள் கூறுவள் — என்றன்
அன்பரே இந்த உலகிலே
தப்பிலா நீங்கள் மடிவதை — யானும்
தாங்கி யிருக்க முடியுமோ.

காதலை நான்துறக் கின்றதால் — என்றன்
காதலர் வாழ முடியுமேல்
வேதனை ஆயிரம் நேரினும் — உமை
விடுவ தன்றிவழி காண்கிலேன்!

என்றவள் சொன்னதைக் கேட்டதும் — அவன்
இன்னல் அடைந்துரை செய்குவான்
கன்னலே என்னைத் துறந்திடில் — இந்தக்
காசினி மீதுயிர் வாழ்வனோ?

காதலர் தாம்பிரிந் திட்டபின் — என்ன
கல்லுக ளாகலை பேணிட
ஓது நெறியுண ராதவன் — இதை
ஓர்ந்தில னேயுல கேற்குமா?

கண்மணி யேநீ புறப்படு — பெரும்
காசினி மீதிட மில்லையா
எண்ணிய வாறுயாம் வாழ்வமே — ஒரு
இன்ப உலகைப் படைப்பமே!

வேறு

மன்னவன் ஆங்கொரு மூலையி லேயிவர்
மாற்ற மனைத்தையுங் கேட்டிருந்தே
இன்ன லடைந்தெதிர் வந்து குதித்திடி
என்ன முழங்கினன் அப்பொழுதே.

உங்களை யான்பிரிக் கின்றதற் கெண்ணிய
உண்மையைச் சொல்கிறேன் இவ்வழகு
மங்கையை மற்றவன் காதலிக்க மனம்
மன்னவ னுயினு மொப்புதில்லை.

என்னைத் தவிர இவள்பிறர் யாரையும்
ஏற்பதை என்னுளங் கேட்குதில்லை
மன்னவன் ஆணைப் படிநடப் பாய்இந்த
மாதினை விட்டுநீ சென்றிடுவாய்.

ஐயோ இதுதகு மோவுன தாணையில்
அக்கிர மங்குடி கொள்ளுவதோ
தெய்வ மகளனை யாளை மணந்திடச்
சித்த மிரங்கிட வேண்டுமென்றே.—

சிற்பி விழுந்து புரண்டழுதான் மன்னன்
சீறிச் சினந்துறை வாளெடுத்தான்
கற்பிற் சிறந்தவக் காரிகை வேந்தனின்
கையைத் தடுத்தவன் கால்விழுந்தாள்.—

என்னடி நாடக மாடுகி ருயெனே
யாரென்றே எண்ணினே வஞ்சகியே
மன்னவன் நானடி என்றுரைத் தேயந்த
மானே யிழுத்தெற்றும் போதினிலே.—


அந்தோ அவளுடல் தன்னி லுயிரில்லே
ஐயகோ மங்கை மடிந்துவிட்டாள்
சொந்த நலத்திஞல் மன்னன் பெருங்கறை
சூடிவிட் டான்பழி தேடிவிட்டான்.

வேறு

வைய மிருண்டது வான மிடித்தது
வாழு முயிர்கள் கலங்கினவே
பெய்யுங் கருமுகில் மின்னித் தெறித்தது
பேதை மலர்கள் அழுதனவே!

*

**கா**ரைநகர் தந்த திரு. செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் கல்வி பயின்றவர். இருபது வயதிலேயே இலண்டன் பல்கலைக்கழக பீ.ஏ. பட்டம் பெற்றவர். தமிழ்த் தாத்தா கந்த முருகேசனாரிடமும் பண்டித வித்துவான் க. கி. நடராசாவிடமும் பண்டை இலக்கியங்களையும் இலக்கண நூல்களையும் நன்கு கற்றவர். சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி மிக்கவர். ஆங்கில சமஸ்கிருத இலக்கியங்களில் நல்ல பாண்டித்தியமுடையவர். முன்னர் மலைநாட்டிற் கல்வி கற்பித்துக்கொண்டிருந்த சுந்தரம்பிள்ளை அவர்கள் இப்பொழுது வதிரி, தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆசிரியப் பணிபுரிந்து வருகின்றார்.



திரு. சுந்தரம்பிள்ளையின் கவிதைகளை எல்லாப் பத்திரிகைகளும் விரும்பி ஏற்கின்றன. சமூக சீர்திருத்தக் கருத்துக்களை இவரது கவிதைகள் பெரிதும் கொண்டிருக்கக் காணலாம். 1967ஆம் ஆண்டு பதுளை பாரதி கல்லூரி நடாத்திய அகில இலங்கைக் கவிதைப் போட்டியில் முதற்பரிசாகத் தங்கப் பதக்கம் பெற்றவர். 'சுதந்திரன்' நடாத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசும் தமிழ்க் காங்கிரசு நடாத்திய கவிதைப் போட்டியிற் சிறப்புப் பரிசும் பெற்றுத் தன்னை ஒரு நல்ல கவிஞராக நிலைநாட்டியவர்.

சமூக சீர்திருத்த இயக்கங்களில் நல்ல ஈடுபாடு கொண்ட திரு. சுந்தரம்பிள்ளை அவர்கள் ஒரு நகைச்சுவைப் பேச்சாளருமாவர். நல்ல தமிழ் அன்பர்; சிறந்த பண்பாளர்.

— வி. கந்தவனம்

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்